"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி - 2025




வாசகர்கள் அனைவருக்கும்
இனிய புதுவருட வாழ்த்து

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# Satash Community Care









உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com

மணி 33

# கலசம்
# KALASAM

ஒலி 114

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

கலசம்
நிருவாகக் குழு

ஆசிரியர்
க ஜெகதீஸ்வரன்

உதவி ஆசிரியர்கள்
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

விநியோகம்
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

விளம்பரம் நிருவாகம்
சிவ தம்பு
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

இலங்கைத் தொடர்பு
வை சிவனருட்செல்வர்
தொலைபேசி
0766167547
மின்னஞ்சல்
svarul@yahoo.co.uk

வெளியீடு
சைவ முன்னேற்றச் சங்கம்

முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

மின்னஞ்சல்
email:
smsukkalasam@gmail.com

# வழுத்துவோம்!

“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்று கொன்றைவேந்தன் சொல்கிறது. நமது தமிழ்க் கலாசாரத்தில் பெற்றோரை முதன்மைப்படுத்தியே நாம் வாழ்ந்து வந்திருக்கிறோம். கூட்டுக்குடும்பமாக இருந்த காலத்தில் அவர்கள் எம்முடனேயே முதுமையான பின்னும் வாழ்ந்தார்கள். உலக மாற்றத்தால், குடும்பங்கள் தொழில், கல்வி காரணமாக வெளியேற, இந்த வாழ்க்கை முறையும் தவிர்க்க முடியாததொன்றாகி மாறியது. ஆனாலும் பல குடும்பங்களில் பெற்றோருடனான பந்தம் மட்டும் மாறாமலே இருந்தது. இப்போது, மேற்கு நாட்டுக் கலாசாரமும் நம்முடன் ஒட்டிக்கொண்டதால் பெற்றோர் உறவென்பது குறையத் தொடங்கிவிட்டது. அதனால் ஆண்டுக்கொருநாள் மட்டும் அன்னையர் தினம், தந்தையர் தினம் என்று அவர்களுக்கு வாழ்த்து அனுப்புவதும் பரிசு கொடுப்பதும் வேடிக்கையான வாடிக்கையாகிவிட்டது. இது தவிர, பிறந்த நாள் வாழ்த்து, திருமணநாள் வாழ்த்து, பொங்கல் வாழ்த்து என்று வாழ்த்து அனுப்பும் கலாசாரமும் வந்துவிட்டது. அதையும் நாம் ஏற்றுக்கொண்டோம். சமூக வலைத்தளம் வந்ததால் இந்த வாழ்த்தனுப்பும் நிகழ்வு பல்கிப் பெருகிவிட்டது. தெரிந்தவர், தெரியாதவர் என்று எல்லோருக்கும் வாழ்த்து அனுப்பும் பழக்கம் நமக்கு வழக்கமாகிவிட்டது.

இப்போது, சமூக வலைத்தளங்களில், இன்னும் ஒருபடி மேலே போய், சிவராத்திரி வாழ்த்து, நவராத்திரி வாழ்த்து, கந்தசட்டி வாழ்த்து, கார்த்திகைத் தீபம் வாழ்த்து என்று சமய வழிபாட்டுத் தினங்களுக்கும் வாழ்த்து அனுப்பத் தொடங்கிவிட்டோம். சமயசம்பந்தமான வழிபாட்டுத் தினங்களுக்கும் வாழ்த்து அனுப்பும் கலாசாரம் வந்துவிட்டது. எதற்கு வாழ்த்து, ஏன் வாழ்த்து அனுப்புகிறோம் என்று புரிந்துகொள்ளாமல் எல்லாவற்றுக்கும் வாழ்த்து அனுப்புவது ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட பொழுதுபோக்காகிவிட்டது. இது எங்கே போய் முடியும் என்று தெரியவில்லை.

“நமச்சிவாய வாஅழ்க!” என்றார் மணிவாசகர். “வாழ்க அந்தணர்” என்றார் ஞானசம்பந்தர். “ஆறிரு தடந்தோள் வாழ்க! என்று தொடங்கி வாழ்க! சீரடியாரெல்லாம்” என்று வாழ்த்தினார், கந்தபுராணத்தில் கச்சியப்பர். “மலர் சிலம்படி”யை வாழ்த்தினார் சேக்கிழார். அருளாளர்கள் இப்படி இறைவனையும் அடியார்களையும் உலகையும் மட்டுமே வாழ்த்தினார்கள்; வாழ்த்திப் பாடினார்கள். அவர்கள் வழிநின்று, இந்தப் புது வருடத்தில், பொருத்தமற்ற வாழ்த்து அனுப்புவதை நிறுத்தி, இறைவனையும் அடியார்களையும், பெரியோரையும் வழுத்துவோம்.

**க ஜெகதீஸ்வரன்**
**ஆசிரியர்**

# இந்த இதழில்

| | |
|---|---|
| நற்சிந்தனை | 03 |
| திருக்கோயில் வழிபாட்டில் திருமுறைகள் | 04 |
| இன்றைக்குச் செய்யவேண்டியதை....... கந்தபுராணச் சிந்தனைகள் | 07 |
| இரண்டுமில்லை | 09 |
| சிருங்கேரி - பயணக் கட்டுரை | 12 |
| Saiva School of Hinduism | 15 |
| The Power of Prayer | 19 |
| திருக்குறள் கதைகள் | 27 |
| இராசன் வாத்தியார் | 31 |
| சேக்கிழார் பெருமான் சைவத்தில்...... | 36 |
| துவஜாரோகணம் | 40 |
| பாஞ்சாலி சபதம் | 41 |

அட்டைப்படம் : **கீரிமலை நகுலேஸ்வரம்**

வடிவமைப்பு - **குகன்**

**கலசம் இதழ் படித்தபின் அதை நண்பருக்கு அல்லது நூல்நிலையத்துக்குக் கொடுங்கள்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**

# நற்சிந்தனை

## (புதுவருடப் பிறப்பு)

## சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!" என்பது எமது தினாந்தரப் பிரார்த்தனை. "வையகமெல்லாம் துயர் தீர்கவே" என்பது நாம் படிக்கும் திருமுறை. "பெருகலாம் தவம் பேதைமை தீரலாம், திருக லாகிய சிந்தை திருத்தலாம்" என்பது அப்பர் பெருமான் வாக்கு. இன்றைய தினத்தில் எமதுள்ளத்தில் இருத்த வேண்டிய வாசகங்கள் இவை. எங்கும் சிவமயம், எல்லாம் சிவமயம், எதிலும் சிவமயம், என்று எண்ணியெண்ணி இறும்பூது எய்த வேண்டுமானால் ஒவ்வொரு அடியும் திருவருளை நோக்கி வைக்க வேண்டுமென்பதற்குப் பயின்று கொள்ள வேண்டும். காலத்தை அளந்து அளந்து வாழுகிறோம். அளவுக்கும் எமக்கும் சம்பந்தமில்லை. என்றாலும் அது தானாகவே இயற்கை நியதிப்படி அமைந்து எம்மை விழிப்படையச் செய்கிறது. கடந்த ஆண்டு நாமாற்றிய தரமான கருமங்கள், தவறான செயல்கள் புத்தாண்டில் நினைக்கப்பட்டு மேலும் தரமான பாதைக்கு வழிநடத்தத் தூண்டுகிறது. ஒழுக்கமும் தெய்வ நம்பிக்கையும் இணைந்து இடைவிடாது முயற்சிசெய்து வாழ்வை வளமாக்க உறுதிபூண வேண்டும். தெய்வ நம்பிக்கை யுடையவர்களே நியாயத்துக்குக் கட்டுப் படுவார்கள். பிறர் துன்பங் கண்டு வருந்துவ தோடு அதனைப் போக்கிவிடவும் முன்வருவார்கள். நமது சமயப் பெரியோர்கள் ஆத்மிகத் துறையில் எவ்வளவு உயர்ந்து நின்றார்களோ, அந்த அளவு மக்கள் தொண்டும் செய்திருக்கிறார்கள். இதனால் இறைவனுடைய அன்புக்குப் பாத்திரரானார்கள். இந்த நிலை கைவருமானால் மற்றவர்களால் ஏற்படும் துன்பங்கள் எம்மை நலிவடையச் செய்யமாட்டா. கோளறுபதிகம் இதனை அழகாகக் காட்டுகிறது.

"கோளரி யுழுவை யோடு கொலையானை கேளல்,
கொடுநோய்க ளான பலவும்
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே."

என்பது ஞானவாக்கு. இவை எமது இல்லங்கள் தோறும் இடம்பெற வேண்டும். புதுவருடப்பிறப்பு என்றால் இறைவழிபாட்டுடன் பொங்கல் செய்து தாமுண்டு பிறருக்கு வழங்கலும், பெரியவர்கள் கையினால் பணம் பெற்று மகிழ்வதும், விருந்தயர்தலும், சுபநேரம் பார்த்துப் புதுக் கருமங்களை ஆரம்பிப்பதும், ஆலய வழிபாட்டைத் தவறாது செய்தலும் எமது பண்டுதொட்ட மரபாகும். இவற்றை வெறுஞ்சடங்காக மட்டும் மேற்கொள்ளாமல் உள்ளத்திலும் புதுமையுணர்வு ஓங்கி, "நானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்பேன்" என்ற ஒரு திடசங்கற்பத்தை எடுத்துக்கொள்வது மேலானது. சிந்தனையிலும் செயலிலும் புதுமை காணவேண்டும்.

"அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணி
அரும்பசி எவர்க்கு மாற்றி,
மனத்துளே பேதாபேதம் பொய்
வஞ்சம் களவு சூது,
சினத்தையும் தவிர்ப்பாராகில் செய்தவம்
வேறொன் றுண்டோ"

என்றார் ஒரு பெரியார். சமய வாழ்வு என்பது தனக்குத்தானே நற்சான்று பகர்வதிலேதான் வெற்றி காண்கிறது. கல்வி என்பதும் நீதி, சத்தியம், அறம் என்பவற்றின் சார்பிலே வளர வேண்டும். இன்று கற்றவர்கள் மத்தியிலே பல ஊழல்களைக் காணுகிறோம். கல்லாத பேர்களே நல்லவர்கள் என்று சொல்ல நேரிடுகிறது. ஆகவே புத்தாண்டை முன்னிட்டு எமது பணிகளை நல்லபடி வகுத்து, தெய்வத்தை முன்வைத்து திருவருளைத் துணைகொண்டு அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் அகத்திலே அன்புங்கொண்டு வாழ வழிகாண்போமாக.

**நன்றி: தங்கத் தமிழ்**
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நூற்றாண்டு விழா மலர்**

# திருக்கோயில் வழிபாட்டில் திருமுறைகள்

திரு மு க மாசிலாமணி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மூவேந்தராட்சி நிலைபெற்றிருந்த சங்ககாலத் தமிழகத்தில் தூய காதலொழுக்கமும் வீரமும் மக்கள் வாழக்கையுடன் இரண்டறக் கலந்து செழித்திருந்தமையினை விரிவாக விளக்கும் சங்க இலக்கியங்கள் உலகியல் வாழ்க்கைக்கு முதன்மை கொடுத்து வாழ்ந்த சங்க காலச் சமூகத்தில் பெரிதுமிடம் பெற்றிருந்த பரத்தையர் ஒழுக்கம், மதுவுண்ணல் போன்ற ஒழுக்கப் பிறழ்வுகள், இடம் பெற்ற தொடர் போர்கள் ஏற்படுத்திய பேரழிவுகள் ஆகியன பற்றியும் பேசுகின்றன. அத்தகைய நடத்தைக் குறைபாடுகளினாலும், பேரழிவுகளினாலும் நலிவுற்றிருந்த மக்களுக்கு அரச ஆதரவுடன் ஆழ வேரூன்றிய சமண, பௌத்த சமயங்கள் போதித்த கொல்லாமை, கள்ளுண்ணாமை, பற்றறுத்தல் போன்ற போதனைகள் தாம் எதிர்நோக்குகின்ற பிரசினைகளுக்குத் தீர்வினைத் தரும் என அவற்றினைப் பின்பற்றத் தூண்டப்பட்டவராயினும் உலகியலுடன் இணைந்தும், இசைந்தும் வாழும் நோக்குடைய சாதாரண மக்களுக்கு வாழ்க்கையினைத் துன்பியலாக நோக்கும் சமண பௌத்த மதங்களின் உபதேசங்கள் ஆரம்பத்தில் அருமருந்தாக அமைந்தன எனினும், பின்பற்றக் கடினமான அப்போதனைகள் மக்கள் மனங்களைக் கவர்வனவாக அமையவில்லை. மாறாகத் தேவார ஆசிரியர்கள் தங்கள் ஆக்கங்களூடாக விவரமாக விளக்கிய சைவம் சார்ந்த இறை தத்துவம், பாரம்பரிய சமய நம்பிக்கைகள், வழக்காறுகள், வழிபாட்டு நடைமுறைகள் என்பன இலகுவில் மக்களைக் கவர்வனவாகவும், எளிமையானவையாகவும் காணப்பட்டன.

இறைவன் மீது இடையறா அன்பு கொண்டு இறைவனின் பெரும் புகழை, போற்றல்களை எல்லாம் பண்ணமைந்த இசைப் பாசுரங்களாகப் பாடுவதன் மூலம் இறையருளுக்கு ஆளாகலாம் என்ற நாயன்மார்களின் நல்லுபதேசங்கள் மக்களைச் சைவத்தின் மீது பற்றுக் கொள்ளத் தூண்டின. சமணர்கள் போதித்தவற்றை கைக்கொள்வதற்குக் கடினமான மந்திர, தந்திரங்களிலும் பார்க்க இறைவனுடைய திவ்விய நாமங்களை அவனுடைய பேரருட் திறனைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பதே அற்புதங்கள் நிகழ்த்தும் மந்திரங்களென்றும்,

“காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது”

“மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்....”

“நலம் மிகக் கொடுப்பது நமச்சிவாயவே ......”

“புனிதனைப் பூவநூரானைப் போற்றுவார்
மனிதரில் தலையான மனிதரே..”

“பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானை”

“இம்மையே தருஞ் சோறுங் கூறையும்
ஏத்தலாமிடர் கெடலுமாம்......”

என்பன போன்ற நாயன்மார்களின் நல் லுபதேசங்களின் பின் மக்கள் அவையவை யாகத் திரண்டனர்.

“நாளுமின்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்” எனச் சுந்தரரால் போற்றப்பட்ட ஞானசம்பந்தர், “தமிழ் மொழித் தலைவர்” எனச் சேக்கிழாரால் போற்றப்பட்ட திருநாவுக்கரசர் ஆகியோர் தலைமையில் சமண, பௌத்த மதங்களின் ஆக்கிரமிப்பிலிருந்து சைவத்தை மீட்பதற்கான செயற்பாடுகள் பக்தி இயக்கமாக - வீறுடன் எழுச்சி பெற்று கிபி 550 - 900 வரையான காலப்பகுதியில் வரலாறு காணாத மாபெரும் மறுமலர்ச்சியினைத் தமிழ்மொழி

வரலாற்றிலும் சைவசமய வரலாற்றிலும் தோற்றுவித்தது.

சங்க காலத்தைத் தொடர்ந்து "களப்பிரர்" என்ற வேற்றரசர்கள் ஆட்சிக்குத் தமிழ்நாடு உட்பட்டது. அவ்வரச வம்சத்தவர்கள் ஆட்சிக்காலத்தில் - சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களே அரச ஆதரவுடைய பெருஞ் சமயங்களாக முதன்மை பெற்று விளங்கின. பல்லவப் பேரரசனான மகேந்திர வர்மனும், பாண்டிய மன்னனான நின்றசீர் நெடுமாறனும் சமண சமயத்தவர்கள் ஆகையால் அவர்களாட்சியில் சமண மதமே அரச மதமாகப் பெருஞ் செல்வாக்குடன் வளர்ச்சி பெற்றதுடன், முன்னைய காலங்களில் முதன்மைச் சிறப்புடன் விளங்கிய சைவ சமயத்தையும், சைவம் சார்ந்த பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் அழித் தொழிக்கும் செயற்பாடுகளே மிக முனைப்புடன் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

சைவப் பண்பாட்டின் கேந்திர நிலையங்களாகச் சிறப்புடன் விளங்கிய சிவாலயங்கள் இடித்தழிக்கப்பட்டு அவ்விடங்களில் சமணப் பள்ளிகள் நிர்மாணிக்கப்பட்டன. காலங் காலமாகச் சிவ நெறியாளர்கள் மேற்கொண்டு வந்த சமயம் சார்ந்த கிரியைகள், வழிபாட்டு நடைமுறைகள் ஆகிய அனைத்தையும் நிறைவேற்றவிடாது தடுக்கப்பட்டனர். சிவனடியார்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப் பட்டுத் துன்புறுத்தப்பட்டனர்.

இவ்வாறு சைவத்திற்கும், சைவப் பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கும் எதிராக மிக முனைப்புடன் கட்டவிழ்த்துவிட்ட ஆட்சி அதிகார அடக்கு முறைகளினால் ஏற்பட்ட அப் பேரழிவுகளிலிருந்து சைவத்தை நிலை நிறுத்துவதற்கும், சமணர்களின் தீவிர சமண சமயப் பிரசாரங்களுக்கும், செயற்பாடுகளுக்கும் எதிராகச் சிவநெறியாளர்களை ஒன்றிணைத்துச் சைவம் சார்ந்து எதிர்ப்பிரசாரங்கள் மேற்கொள்வதற்கும் கோயில்களை மையப் படுத்திய பண்பாட்டுப் பாரம் பரியங்களை மக்களிடையே பரப்பவும், வீறுடன் செயற்படக் கூடிய ஆளுமைமிக்க செயற்பாட்டாளர்களை தமிழகம் நாடி நின்ற வேளையில் தான், சமய குரவரெனச் சைவத் தமிழ் வரலாறு போற்றும் நாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரின் அவதாரம் அடுத்தடுத்து இடம் பெற்றது. இவர்களில் முதலில் தோன்றியவரான நாவுக்கரசரும், அவரின் முதுமைக் காலத்தில் தோன்றியவரான ஞானசம்பந்தரும், முறையே தமிழ்நாடு முழுவதனையும் தமது வல்லாதிக்கத்திற்கு உட்படுத்திச் சமணப் பேரரசை நிறுவி ஆண்டு சைவத்திற்கும் சைவப் பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கும் குறிப்பாகத் திருக் கோயில் வழிபாட்டு நடைமுறைகளுக்கும் பேரழிவுகளை ஏற்படுத்திய சமணப் பேர ரசனான மகேந்திரவர்மனையும், பாண்டியப் பேரரசனான நின்றசீர் நெடுமாறனையும், தாம் பெற்றுக் கொண்ட அதீத இறையாற்றல்கள் மூலம் சைவர்களாக மாற்றிய நிகழ்வுகளுடன் தமிழகத்தில் சைவம் புத்துயிர் பெற்றது.

வேற்றரசர் ஆக்கிரமிப்புக்குட்பட்டுச் சிதைந்த சைவத்தை மீட்டெடுத்ததுடன், சைவப் பண்பாட்டின் கேந்திர நிலையங்களாக விளங்கிய கோயில் வழிபாட்டு நடை முறைகளுக்கும், பண்பாட்டுப் பாரம் பரியங்களுக்கும் புத்துயிர் அளித்து மறுமலர்ச்சியுறச் செய்யும் நோக்கில் தமது செயற்பாடுகளை மிக முனைப்புடன் மேற்கொண்டனர்.

மேற்குறித்த நோக்கினை நிறைவேற்றுவதற்குத் தேவார ஆசிரியர்கள், மிகச் சிறப்பாக ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் சைவத்திற்கு எதிராகச் சமணர்கள் மேற்கொண்ட மிகப்பெரிய அழிப்பு நடவடிக்கையினால் சிதைந்து சின்னாபின்னமாகி அரச ஆதரவின்றிக் கைவிடப்பட்டுச் சீரழிந்திருந்த சிவாலயங்களை மீண்டும் வழிபாட்டிடங்களாக மேன்மையுறச் செய்வதன் மூலம் சைவசமய எழுச்சிக்கான ஆக்கப் பணிகளுக்கு முதன்மையளித்துச் செயற்பட்டனர்.

இத்தகைய சிவாலயங்கள் பல கிறிஸ்துவுக்கு முற்பட்ட சங்க காலத்திலிருந்தே தமிழகத்தில் பூசை, வழிபாடுகள் இடம்பெற்றுச் சிறப்புடன் விளங்கியனவாகத் தொல்காப்பியம்,

புறநானூறு, கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை, மலைபடுகடாம் போன்ற சங்க நூல்களிலும் அவைகளுக்குப்பின் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை, போன்ற சமண, பௌத்த நூல்களிலும், தேவார ஆசிரியர்களுக்கு முன் வாழ்ந்தவர்களும் பதினொராம் திருமுறையில் அடங்கும் பக்திப் பநுவல்களின் ஆசிரியர்களுமான கபிலர், பரணர், ஐயடிகள் காடவர்கோன் ஆகியவர்களின் நூல்களிலும் குறிப்பிடப் பட்டுள்ளன. இவர்களுடன் 63 நாயன்மார்களுள் ஒருவரான கோச்செங்கட் சோழனால் நிர்மாணிக்கப்பட்டனவாகப் பெரியபுராணம் குறிப்பிடும், "திருவானைக்கா" போன்ற எழுபது பெருங் கோயில்களுட்படப் பூசை, விழாக்கள் நடைபெற்று விளங்கிய பல கோயில்களிருந்தன.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால் வளை மேனி வலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்"

"நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்"

"நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துப் பூதமீறாக"

எனச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய சமண, பௌத்த நூல்களின் குறிப்புக்களையும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க நூல்களையும் நோக்கும் போது சங்க காலத்தில் சிவன், திருமால், கொற்றவை, முருகன் ஆகிய தெய்வங்களுக்கான கோயில்கள் பற்றியும், அவற்றில் பூசை வழிபாடுகள் மிகச் சிறப்பாக இடம்பெற்று வந்தன என்பதும், அவற்றுள்ளும் சிவவழிபாடும் சிவனுக்கான கோயில்களுமே முதன்மைச் சிறப்புடன் முக்கியத்துவம் பெற்றிருந்தன என்பதனையும் தெரிந்துகொள்ள முடிகின்றது. •

# கை வேல்

மேல் நோக்கிய மூன்று தலையும், கீழ்நோக்கிய மூன்று தலையுமாக ஆறு தலைகளையுடைய சூலம்போன்ற, அதாவது இரு சூலம் மேல்கீழாக ஒருங்கிணைந்தாற் போன்ற ஒரு வடிவம்.

அரண்தரு கழற்கால் ஐயன் அறுமுகத் தெழுந்த சீற்றம்
திரண்டொரு வடிவின் வேறாய்ச் சென்றதே எனவும் நான்கு
முரண்தரு தடந்தோள் அண்ணல் முத்தலை படைத்த சூலம்
இரண்டொரு படையாய் வந்த தென்னவும் ஏகிற் றவ்வேல்
- தாரகன் வதைப்படலம் - *182*

அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தைகண் ணின்றும் வந்த இயற்கையால் சத்தி யாம்பேர்
தந்திடும் பநுவல் பெற்ற தன்மையால் தனிவேல் பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டுளம் கவலை தீர்ந்தோம்.
- மூன்றாம் நாள் பானுகோபன் - *212*

என்னும் செய்யுள்கள் இந்த வடிவத்தைச் சுட்டுகின்றன போலும். அறிஞர்கள் சிந்திப்பார்களாக.

*நன்றி: திருமுருகாற்றுப்படை, மாவை முருகன் மார்கழி மாதப் பஜனை வெளியீடு 5 பண்டிதர் வே சங்கரப்பிள்ளை (1972)*

# இன்றைக்குச் செய்யவேண்டியதை இன்றைக்குச் செய்யவேண்டும்

கந்தபுராணச் சிந்தனைகள்

Dr ச சிவலோகநாதன்

"அன்றறிவாம் என்னாது அறம்செய்க
மற்றையது
பொன்றுங்காற் பொன்றாத் துணை"

இளைஞராக உள்ளவர் பிற்காலத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்யவேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியாத துணையாக இருக்கும். இது வள்ளுவப்பெருந்தகையின் வாக்கு. இது ஆன்மிக ஈடேற்றத்துக்கு மாத்திரமன்றி உலகாயத முன்னேற்றத்திற்கும் பொருந்தும். மிகவும் வெற்றிகரமாக முன்னே றியவர்களின் குணாதியங்களை ஆராய்ந்த வர்கள் இன்றைக்குச் செய்யவேண்டியதை இன்றைக்கே செய்வது அவர்களின் தற்சிறப்பான இயல்பாக இருப்பதாகக் கண்டிருக்கிறார்கள். கந்தபுராணமும் இதே கருத்தையே சொல்கின்றது. இது விநாயகப் பெருமானால் அழிவு செய்யப்பட்ட கயமுகாசுரனுக்குச் சுக்கிராசாரியார் உரைப்ப தாகச் சொல்லப்படுகின்றது.

முன்னொரு காலத்திலே தேவர்க்கரசனான இந்திரன், அசுரகுலத் தலைவனான அசுரேந்திரனை எதிர்த்துப் போர்புரிந்து வெற்றிவாகை சூட்டினான். மனம் புழுங்கிய அசுரேந்திரன் குலகுருவாகிய சுக்கிராசாரியரிடம் சென்றான். "சிறியவர்கள் பெருமையினின்றும் தவறுவரானால் அவர்களைத் தெளிவுபடுத்திப் பற்பல உறுதிநெறிகளை அறிவுறுத்தி, அவர்களை உயர்ந்த நெறியில் செலுத்துதல் குருவானவர்களின் கடமையாகும். அதைத் தாங்கள் அறிவீர்கள். ஆதலால் எம் குலம் உய்யும் வழியைத் தாங்கள் உரைத்தருள்க" என்று சொன்னான்.

சிறுவ ராயினோர் பெருமையிற்
பிழைப்பரேல் தெருட்டி
உறுதி பற்பல கொளுத்தி மற்றவர்
தமை உயர்ந்த
நெறியின் ஆற்றுதல் குரவர்தங்
கடனது நீயே
அறிதி யாதலின் உய்யுமா
றுரைத்தியென் றறைந்தான்

கயமுகன் உற்பத்திப் படலம் 6

இவ்வாறு அசுரேந்திரன் வேண்ட, சுக்கிராச் சாரியார் சொல்லுவார்: "ஆதியான சிவ பெருமானின் அடிகளையே அடைந்த பெரு முனிவர்களில் சிரேட்டர் வசிட்டர் ஆவார். அந்த வசிட்டருடைய குலத்தில் வந்தவர், பேரறிஞர், உயர்ந்த நிலையில் உள்ளவர் மாகதர் என்ற பெயரையுடைய முனிவராவர். அந்த மாகத முனிவரிடம் ஓர் அசுர கன்னிகையை அனுப்பு. அவள் அவருடன் கூடினால் உங்கள் குலத்தை மேன்மையடையச் செய்யக்கூடிய குமாரன் ஒருவன் பிறப்பான்."

கேட்ட அசுரேந்திரன் மகிழ்ந்து எவரும் விரும்பும் கொடிபோன்ற விபுதை என்ற கன்னிகையை மாகத முனிவரிடம் அனுப்பினான். அவள் பலகாலம் மாகதருக்குச் சமீபமாக இருந்து தவம் செய்து, அவர் மயங்கிய ஒரு தருணம் பார்த்து அவருடன் கூடினாள். அவர்களுக்கு கயமுகாசுரன் பிறந்தான். கயமுகாசுரன் பல அட்டூழியங்களைச் செய்துகொண்டு திரிய லானான். ஒருநாள் அவன்முன் சுக்கராச்சாரியார் தோன்றினார். அவர், "நான் மிகவும் புகழ்பெற்ற உங்கள் குலத்தின் குரு. தெளிந்த பல

வேதங்களை உணர்ந்தவன். சுக்கிரன் என்ற பெயர் கொண்டவன். அசுரர் குலத்தின் ஒப்பற்ற முதல்வனாகிய அசுரேந்திரன் அனுப்ப உன்னிடம் வந்தேன். மேலான வழியில் நீ நடப்பதற்குரிய நல்ல நெறிகளைச் சொல்லித் தரப்போகிறேன்." என்று சொன்னார். கயமுகாசுரன் அவருடைய திருவடிகளை வணங்கினான். சுக்கிராச்சாரியார் சொல்லத் தொடங்கினார். "நீ மிக்க தவத்தைச் செய்யவில்லை. குற்றமற்ற சிவபெருமானை நீ அறிந்துகொள்ளவில்லை. பகைவரின் மாயங்களையும் சிறப்புக்களையும் வலிமை யையும் சற்றேனும் உணரவில்லை. இவ்வுடல் நிலையற்றது என்பதையும் கருத்தில் கொள்ளவில்லை. பல வாழ்நாள்கள் வீணாகக் கழிந்தன. செல்வமும் வலிமையும் சிறப்பும் ஆயுளும் அழகும் மேலான ஊக்கமும் வீடுபேறு எல்லாம் தவத்தால் வருவன. தெரிகின்ற இற்றை நாள்வரை இத்தவத்தை நீ செய்யாதது ஏன்? செய்யப்படும் அறம், வித்தை, பெறுவதற்கரிய புத்திரர்கள், கீர்த்தி, வெற்றி, வலி, மிகுந்த செல்வம், பெருமை, இன்பம், தவஒழுக்கம், பெருஞானம் என்றெல்லாம் எமன் வந்து அழைக்கும் காலத்தில் அவற்றைப் பெற எண்ணினாற் கிடைக்குமோ? கிடைக்காது." என்று இவ்வாறாகப் பல புத்திமதிகளைச் சுக்கிராச் சாரியார் சொன்னார்.

ஆற்றிடும் தருமம் விஞ்சை அரும்பெறல்
மகவும் கீர்த்தி
ஏற்படு கொற்றம் ஆற்றல் இருநிதி
பெருமை இன்பம்
நோற்றிடு விரதம் சீலம் நுவலரும்
போதம் யாவும்
கூற்றுவன் கூவும் ஞான்று குறித்திடிற்
கூடுமோதான்

கயமுகன் உற்பத்திப் படலம் 60

காலன் என்கின்ற மீனவன், காலம் என்கின்ற வலையை வீசிப் பூமியாகிய நீர்நிலையிலே வாழும் உயிர்களாகிய மீன்களை ஏற்கெனவே வாரி இழுத்துக்கொண்டு போய்க் கொண்டிருக்கிறான். அவ்வுயிர் வாழ்நாள் முடிவான மரணக் கரையைச் சேரும்போது, மீனவனான காலன் கையுள் அகப்பட்டு நலிந்து இறந்துவிடும்.

காலனா கியதோர் சேர்ப்பன் காலமாம்
வலையை வீசி
ஞாலமாந் தடத்தில் வைகும் நல்லுயிர்
மீன்கள் வாரி
ஏலவே ஈர்த்துநின்றான் இறுதியாங்
கரைசேர் காலை
மேலவன் கையுட் பட்டு மெலிவொடு
வீடும் அன்றே

கயமுகன் உற்பத்திப் படலம் 61

இவ்வாறு சொன்ன சுக்கிராச்சாரியார் தொடர்ந்து, "ஆகையினால் எல்லோருக்கும் மேலான சிவபெருமானை நினைத்து மிக்க தவத்தைச் செய். அவர் நீ கேட்ட வரம் எல்லாவற்றையும் அளிப்பார்" என்று கூறினார். கயமுகனும் அவ்வாறு ஐந்து குண்டங்களிலே வேள்வித் தீயை வளர்த்துப் பலகாலம் சிவனை நோக்கிக் கடுந்தவம் செய்தான். சிவபெருமான் அவன்முன் தோன்றி, அவன் வேண்டிய வரங்கள் எல்லாம் தந்தார். இவ்வாறாக உலக வாழ்வுக்கும் ஆன்மிக ஈடேற்றத்துக்கும் இன்றியமையாத, "இன்றைக்குச் செய்ய வேண்டியதை இன்றைக்குச் செய்யவேண்டும். காலம் தாழ்த்தக்கூடாது" என்ற தத்துவத்தைச் சுக்கிராச்சாரியாரின் வாயின்மூலம், கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் சொல்லா நிற்கின்றது.

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
தாற்றின் அடங்கப் பெறின்

திருக்குறள் 123

# இரண்டுமில்லை

கிருபாநந்தவாரியார்

மாணிக்கவாசகப் பெருந்தகை, சிந்தனையை இறைவனுக்கே ஆக்கிக் கொண்டார். அந்தக்கரணங்களையும் பொறி புலன்களையும் ஆண்டவனுக்கு அடிமையாக்கியபின், இறைவன் வெளிப்பட்டுத் தோன்றி, அருள் மைந்தனை ஆட்கொண்டார். அதனால், தமக்கு இன்பம் - துன்பம், இகழ் - புகழ், இறப்பு - பிறப்பு, நினைப்பு - மறப்பு, என்ற இன்பதுன்பம் இரண்டும் இல்லாமற்போயின என்கின்றார் மாணிக்கவாசகர் - அவரது வாக்கமுதை நயமுற விளக்குகிறது இக்கட்டுரை.

**எல்லாம் இரண்டு**

உலகத்திலே எல்லாம் இரட்டை இரட்டை களாகவே அமைந்திருக்கின்றன; இன்பம் - துன்பம்; வெய்யில் - நிழல்; ஆக்கம் - நீக்கம்; வெட்பம் - தட்பம்; போக்கு - வரவு; இறப்பு - பிறப்பு; நினைப்பு - மறப்பு; இரவு - பகல்; நன்மை - தீமை; புண்ணியம் - பாவம்; இகழ் - புகழ்; மதிப்பு - அவமதிப்பு; இவ்வாறு எல்லாம் இரட்டை இரட்டையாகவே அமைந்துள்ளன. இந்த இரட்டை தோன்றாமல் இருப்பதுவே அருள் வாழ்வு.

இருள் வாழ்வில் இவை தோன்றும். அதனால் விளைகின்ற அல்லலும் பல.

**இறைவன் நம்மை ஆட்கொள்ளும் அருட்டிறம்**

ஒரு பெரிய கோடீச்சுரர். அவருடைய மகன் பரம காலிகளாகிய குடியன், தடியன், வெறியன், மடையன், அசடன்களுடன் கூடித் திரிகின்றான். அந்தக் காலிகள் சொன்னபடி கேட்கின்றான். தனது பெருந்தன்மையை நினைக்கவில்லை. குடியன், தடியன்களுக்கு அடிமையாகி, அவர்கள் கைப் பம்பரமாகச் சுழல்கின்றான். தந்தை இதுகண்டு வருந்துகின்றார். தன்னிமுள்ள எல்லையற்ற நிதியை நியாய முறையிற் பெறத் தெரியாது, ஒரு ரூபாய்க்குப் பலரிடம் போய்த் தன் மகன் தொங்குகின்றதைக் கண்டு இரங்கினார். அவர் ஒரு தந்திரம் புரிந்தார். அது என்ன தந்திரம் தெரியுமா? அழகான தந்திரம்; அற்புதமான தந்திரம்.

ஒருநாள் மெல்ல மகனை அடக்கியாளுகின்ற அந்தக் குடியனையும், தடியனையும், வெறியனையும், மடையனையும் தனியே அழைத்தார். அவர்கள் பயந்தே போனார்கள். இவர் எதிரிலேயே வருவதற்குத் தகுதி யற்றவர்கள்; மிக்கக் கேவலமானவர்கள். மிக உயர்ந்த நிலையில் உள்ள இவர் நம்மை ஏன் அழைக்கின்றார் என்று கருதினார்கள். ஒரு வேளை அவருடைய மகனை நாம் கெடுக்கின்றோம் என்ற சினத்தினால் நம்மைக் கட்டி வைத்து அடிக்கப்போகின்றாரோ? என்ன தண்டனை தருவாரோ? இன்றைக்கு நமக்கு என்ன கெட்டகாலமோ? என்றெல்லாம் எண்ணி நடுங்கிப்போனார்கள். கால் நடுங்க, கை நடுங்க மெல்ல வந்து அந்தக் கோடீஸ்வரப் பிரபுவுக்கு முன்னால் நின்றார்கள்.

அவர் அவர்களைக் குளிர்ச்சியாகப் பார்த் தருளினார். அவருடைய அருட்பார்வை அவர்களுடைய அச்சத்தை அகற்றியது. சிறிது திடம் பெற்றார்கள்.

"நீங்கள் உணவுக்கும் உடைக்கும் மெத்தச் சிரமப்படுவதாக நான் உணர்கிறேன். இங்கும் அங்குமாக நீங்கள் இனி அலையவேண்டாம். நமது சிங்கார அரண்மனையிலே உங்களுக்கு நான் வேலை தந்துவிட்டேன். ஆளுக்கு

முந்நூறு ரூபாய் சம்பளம். உங்களுக்கு இங்கேயே சாப்பாடு, துணிமணி எல்லாம் நானே தருவேன். கவலையற்று இங்கு வேலை பார்த்துக்கொண்டு இருங்கள்" என்றார். வெள்ளிக் கிண்ணங்களில் குங்குமப்பூ இட்டுக் காய்ச்சிய் பால் தந்தார். இவர்கட்குக் கனவா நனவா என்று புரியவில்லை. நமக்கு மாதம் பதினைந்து ரூபாய் கூட யாரும் தரமாட்டார்களே. உதவாக்கரைகள் என்று நம்மை யாருமே வேலைக்கு வைத்துக்கொள்ள மாட்டார்களே. நமக்கு இன்று பதினொன்றாம் இடத்துக்குக் குரு வந்துவிட்டாரா? இன்றுடன் நமது கவலை ஒழிந்தது என நினைத்தார்கள். அவர் அடிமலர்மீது விழுந்தார்கள். "நாங்கள் உய்வு பெற்றோம்" என்றார்கள். உடனே அத்தலைவர் அவர்கட்கு நல்ல பட்டு வேட்டிகள் தந்து, "என்னிடம் ஊழியம் புரிகின்ற நீங்கள் சிறப்பாக இருக்கவேண்டும் இனி ஒழுங்காகவும் பெருந்தன்மையாகவும் இருங்கள்" என்றார். "நல்லது" என்றார்கள்.

அதுமுதல் அவர்கள் கண்ட இடங்களில் அலைவதில்லை. குடி, வெறி, களவு, கொலை முதலிய தீமைகளை விடுத்தார்கள். அவருடைய அரண்மனையில் இருந்து அலுவல் பார்த்தார்கள். எஜமானுக்கே நேர் அடிமையாகிவிட்டார்கள். அதுமட்டுமல்ல, முன் தாங்கள் கைப் பம்பரமாய் ஆட்டிய எஜமானனுடைய புதல்வனைக் கண்டு இப்போது அஞ்சி மரியாதை தந்தார்கள். தங்களுக்கு ஊதியம் தரும் எஜமானனுடைய புதல்வனுக்கு நாம் அடிமைகள் என்பதை உணர்ந்தார்கள்.

இவ்வாறு தன் மகனை அடிமைகொண்டு அலைக்கழித்த அப் புல்லர்களைத் தான் தனக்கு ஏவலர்களாகச் செய்து தன் மகனுக்கும் அடங்கி நடக்குமாறு செய்துவிட்டார் அத் தலைவர்.

இந்தத் தந்திரத்தையே இறைவன் என் விஷயத்தில் கையாண்டார்.

இறைவனுடைய புதல்வன் நான். மெய், வாய், கண், செவி, நாசி, மனம் முதலிய புல்லர்களுடன் கூடி நான் அவமே திரிந்து அலைந்தேன். என் அப்பனை நாடாது உழன்றேன். என் அப்பன் அகிலலோகச் சக்கரவர்த்தி என அறியாது கெட்டேன்.

எம்பெருமான் என்ன செய்தான்? என்னை அடக்கி ஆட்டிவைத்த மனம் முதலிய அந்தக்கரணங்களையும் கண் முதலிய பொறி புலன்களையும் அவர் தனக்கு நேரே அடிமையாக் கொண்டார்.

சிந்தனையை அவருக்கே ஆக்கிக்கொண்டார். என் கண்களை அவர் திருவடிக்கே ஆளாக்கிக்கொண்டார். என் கரங்களை அவர், தன்னையே வணங்குமாறு செய்தார். வம்பு வார்த்தைகள் பேசிக்கொண்டிருந்த என் வாக்கை, அவருடைய மணிவார்த்தைகளையே பேசுமாறு செய்துகொண்டார். இவ்வாறு ஐம்புலன்களும் மகிழும்படி இறைவன் வெளிப்பட்டுத் தோன்றி ஆட்கொண்டார். அன்றியும் என்னுள்ளே புகுந்து அமுதத்தை நிறைத்துத் தேக்கி அருள்புரிந்தான்; இறுதியில் அவனையே எனக்குத் தந்துவிட்டான். அங்ஙனம் தந்த ஆண்டவன் கருணை மலையாகவும் ஒப்பற்ற ஒளிமயமாகவும் விளங்குகின்றான். அதனால் எனக்கு இன்பம் - துன்பம், இகழ் - புகழ், இறப்பு - பிறப்பு, நினைப்பு - மறப்பு என்ற இரட்டைகள் இல்லாமற் போய்விட்டன.

இனி, மணிவாசகப் பெருந்தகையார் கூறுகின்ற அமுதப் பாடலைப் பாருங்கள்:

சிந்தனை நின்றனக் காக்கி நாயினேன் றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம் புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே

*விச்சை மாலமுதப் பெருங்கடலே! திருச்சதகம். அடியேனையும் அடியேனது கருவி கரணங்களையும் ஆட்கொள்ளும் வித்தையில் வல்ல பெருமை தங்கிய அமிர்தக் கடலே!*

*மலையே! - என்றும் மாறுபாடின்றி மலைபோல் விளங்குபவரே!*

*செந்தாமரைக்காடு அனைய மேனித் தனிச்சுடரே! - சிவந்த தாமரை வனம்போன்ற செம்மேனி எம்மானாகிய ஒப்பற்ற ஒளியே!*

*சிந்தனை நின்றனக் காக்கி - பொன்னையும் பொருளையும் மாதரையும் மக்களையும் சிந்தித்துத் திரிந்த எனது சிந்தனையைத் திருப்பி உன்னையே சிந்திக்குமாறு புரிந்து!*

*நாயினேன்றன் கண் இணை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி - வேறு வேறு காட்சிகளைக் கண்டு மயங்கித் திரிந்த அடியேனுடைய இரண்டு கண்களையும் உனது திருவடி மலரையே நோக்குமாறு செய்து!*

*வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி - எனது காயத்தையும் உனது திருவடியையே வணங்குமாறு செய்து!*

*வாக்கு உன் மணிவார்த்தைக்கு ஆக்கி - வீண் வார்த்தைகளை ஒழியாது பேசிக்கொண்டிருந்த என் வாக்கை உனது மாணிக்கவாசகத்தையே பேசுமாறு புரிந்து,*

*ஐம்புலன்கள் ஆரவந்தனை - எனது ஐம்புலன்களும் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்று உன்னையே அநுபவிக்குமாறு தோன்றி வந்தருளிச் செய்தாய்.*

*உள்ளே புகுந்த - எனக்குள்ளே புகுந்தனை*

*உன்னைத் தந்தனை - அன்றியும் உன்னையே எனக்குத் தந்தருளினாய்.*

*இரண்டும் இலி இத் தனியனேற்கே - அதனால் இத் தனியனேற்கு இன்பம், துன்பம் என்ற இரண்டும் இல்லையாயின.*

**நன்றி: திருவாசகத் தேன் *1959***




சிருங்கேரி, கர்நாடக மாநிலத்தின், சிக்மகுரூர் மாவட்டத்தில், மலைசார்ந்த இயற்கை வளமுள்ள துங்கா நதிக்கு அருகில் உள்ள இடமாகும்.

பெண்வாடையே காணாது, மான் கொம்புடைய ரிஷ்யசிருங்கர் என்ற முனிவர் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த மலையே சிருங்ககிரி என அழைக்கப்பட்டு, பின்னர் சிருங்கேரி என நாமம் பெற்றது.

கொதிக்கும் வெய்யிலில், பிரசவ வேதனையில் துடிக்கும் தவளையையும், அதற்கு நிழல் கொடுப்பதற்காக ஒரு நாகம் படமெடுத்து நிற்பதையும் கண்ணுற்று அதிசயித்தார் ஆதிசங்கரர். விரோதிகள் ஒருமித்து உதவி செய்யும் இடமே, இது புண்ணிய பூமி எனக் கருதினார். இதனால் சிருங்கேரியில் தங்கி பல மடங்களையும், ஆலயங்களையும் ஆரம்பித்தார்.
தற்போதும் துங்கா நதிக்கரையில், சிறு மண்டபத்தில் சிலையாக தவிக்கும் தவளைக்கு படமெடுத்து நிழல் கொடுக்கும் அமைப்பைக் காணலாம்.

வித்யசங்கர் ஆலயம்:
ஆன்மிக அகராதியாகவும், அன்றைய புராதன இந்திய வானியல், கணித, விஞ்ஞான, ஆலய அமைப்புக்கும் எடுத்துக்காட்டாகவுமுள்ள சிவ ஆலயமாகும்.

தேர் போன்ற தோற்றமுள்ள இக்கோயில் போன்று, இந்தியாவில் வேறொரு இடத்திலும் இல்லை. ஒரு முறை பார்த்தால் போதும். பசுமரத்தாணி போல் மனதில் பதிந்துவிடும். எமக்கும் அப்படியே தொல்பொருள் ஆராய்ச்சி சம்பத்தப்பட்டோர் மீண்டும் மீண்டும் சென்று தேடித்தேடி இந்த இடத்தை ஆராய்கின்றனர்.



1338 ஆம் ஆண்டில் கருங்கல்லால் ஆன ஹொய்சான, திராவிட முறையில் மூன்று மாடிகள் கொண்ட அபூர்வ அமைப்பு. ஆறு வாசல்களோடு, நீள் வட்ட வடிவத்தில், உயர்ந்த அகலமான நடைபாதை மீது கம்பீரமாகக் காட்சியளிப்பது. மக்கள் கூட்டம் கூட்டமாக இதன் மீது நடந்து செல்வதைக் காணலாம்.

நடந்து செல்லும் போது சிற்பக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகவுள்ள சிற்பங்கள் காண்பர். இவை பற்றி ஒரு பேராசிரியை ஆராய்ந்து உரையாற்றியுள்ளார். முதலில் விலங்குகள், பின்னர், சிவ விஷ்ணுவின் அவதாரங்களை அழகிய சிற்பங்களாகக் காண்பர். இவை சிவா- விஷ்ணு ஒற்றுமையை உணர்த்துகிறது. இவற்றில் ஒன்று சிவபெருமான் மார்க்கண்டேயரைக் காப்பாற்ற எமனை உதைத்த அழகிய சிற்பக்காட்சியாகும்.

துங்கா நதிக்கரைக்குத்தான் நாங்கள் முதல் சென்றோம். அங்கு நிற்கும் மக்கள் கூட்டம் தான் எம்மைக் கவர்ந்தது. அவர்கள் பொரி கடலையைப் போடுவதால், மீன்கள் துள்ளி மேலே சென்று பெற்றுக் கும்மாளம் அடிக்கும் காட்சியைப் பார்க்க அழகாக இருந்தது. இம்மீன்கள் போன்று பெரிய மீன்களை வேறொரு இடத்திலும் நாம் காணவில்லை. இதனால் போலும் மக்கள் இங்கு நீராடுவதில்லை.

சிவலிங்கங்கள் நதிக்கரையில் உள்ளன. ஆன்மிகவாதிகள் கையால் ஆற்று நீரை எடுத்து லிங்கத்திற்கு அபிடேகம் செய்து மானசீகமாக ஆராதிப்பதைக் காணலாம்.

துங்காநதி 16 கிமீ தூரம் சென்று பத்ரா நதியோடு இணைந்து துங்கபத்ர நதியாகிறது.



கருவறை மேற்கு திசையில் உள்ளது. ஆறு படிகள் ஏறி உட்செல்லும் போது ஒருபக்கம் வித்யகணபதியும், மறுபக்கம் துர்க்காவும் இருக்கின்றனர். ஏனைய மூன்று பக்கங்களிலும் பிரம்மா, விஷ்ணு, சிவன் தமது துணைவியருடன் காட்சியளிக்கின்றனர். கருவறையில் வித்யசங்கர் சமாதிமீது பிரதான சிவலிங்கம் உள்ளது. இந்த லிங்கத்திற்குத்தான் கிராமமாகப் பூசைகள் நடைபெறுகின்றன.

வித்யசங்கர் யார்? வித்யசங்கர் தீர்த்தர். வேத விற்பன்னர், மந்திர தந்திர, தியானம் போன்றவற்றால் அரிய ஞானி, 105 வருட காலம் வாழ்ந்து சமாதியானவர்.

பிரசித்திபெற்ற மண்டபத்தைக் கிழக்கு வாசல் ஊடாகச் சென்று அடையலாம். இங்கு மண்டபத்தின் அரைப்பங்கையே ஆட்கொள்ளும் பன்னிரு (12) கற்தூண்கள் காட்சியளிக்கின்றன. ஒவ்வொரு தூணும் ஒரு இராசியாகப் பன்னிரண்டு இராசிகளைக் குறிக்கின்றன. இத்தூண்களில் அவ் இராசியின் சின்னமும் அதன் தேவதையும் பொறிக்கப்பட்டுள்ளது.



காலைச் சூரியனின் கதிர்கள் தூண் ஒன்றில் பட, அத்தூண் எந்த இராசியில் பிரகாசிக்கிறது என்பதைக் காட்டுகிறது. சூரியன் ஒரு இராசியில் ஒரு மாதம் தான் நிற்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞானம், வானியல், கணிதம் 1338ஆம் ஆண்டில் தலை தூக்காத காலத்தில் இவை அன்றைய வானியல், கணித வளத்தைக் காட்டுகிறது. அறுநூறு ஆண்டுகள் கழித்தும் இக்கணிப்புப் பிழைக்கவில்லை.

மூன்றாவது மாடியில் நந்திகள் உள்ளன. விமானத்தில் ஒரு பெரிய கலசமும், சிறு கலசங்களும் உள்ளன.

தொல்பொருள் ஆராய்ச்சி அமைப்பின் கீழ் உள்ளது இவ்வரிய ஆலயம்.

சிருங்கேரியில் 3000 மக்கள் அமர்ந்து உணவை உண்ண, நேர்த்தியான, சுத்தமான காற்றோட்டத்துடன் உணவுக் கூடம் உள்ளது. சுடச்சுட சாதம், பூசினிக்காய், கத்தரிக்காய் கலந்த சாம்பார், ரசம், மோர், இனிப்பு, பாயசம் யாவும் கிடைக்கும்.

2001 ஆம் ஆண்டு கணக்கின்படி, சிருங்கேரியில் எழுத்தறிவு 83% இந்தியாவில் எழுத்தறிவு 59.5%.

இங்கு பேசும் மொழி கன்னடம் ஆகும்.

வித்யசங்கர் ஆலயத்தில் அபிடேகம், அர்ச்சனை, நவக்கிரக பூசை நடைபெறும்.

திறந்திருக்கும் நேரங்கள்:
காலை 6 மணி - மாலை 2 மணி
மாலை 5 மணி - இரவு 9 மணி
பேருந்து வசதிகள் நிறைய உண்டு.
விமான நிலையம் - மங்களூர்
புகையிரதம் - உடுப்பி

ஆதிசங்கரர்:
நம்பூதிரி பிராமணர்களான சிவகுரு - ஆர்யாம்மா தம்பதியருக்குப் பிள்ளைக்கலி தீர்க்க, காலடியில் அவதரித்தார். ஐந்து வயதில் தகப்பனை இழந்து, பன்னிரு வயதில் வீட்டைவிட்டு வெளியேறி, பல குருமாரிடம் பயின்று ஆன்மிக வாழ்வில் ஈடுபட்டார்.

சிருங்கேரியை அடைந்து, புண்ணிய பூமி எனக் கருதி, தெற்கில் சாரதா பீடம், வடக்கில் பத்ரிநாத் மடம், கிழக்கில் பூரி மடம், மேற்கில் துவாரகா மடம் போன்றவையை உருவாக்கினார். பல ஆலயங்களையும் புனிதப்படுத்தி, அபரிதமான தெய்வங்கள் நிறைந்த இந்து சமயத்தில் சண்மதத்தை நிறுவினார். அதாவது ஆறு தெய்வங்கள் தான் பிரதானமானவை என்பது.

சிருங்கேரியில், தனது தாயாரின் இறுதி நாள்களை உணர்ந்து, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற, பட்டினத்து அடிகள் போன்று வீடு சென்றார். தாயாரோடு கதைத்து, அவரை மடிமீது அமர்த்தி மரணக் கிரியைகளை நிறைவேற்றினார்.

தட்சிணாமூர்த்தியின் அவதாரமாகக் கருதப்படும் இஞ்ஞானி 32 வயதில் தனது இறுதிக் காலத்தை அறிந்தார். கேதாரநாத் சென்று தங்கிப் பூவுலகை விட்டு நீங்கினார்.

ஆதிசங்கரர் சமாதி கேதாரிநாத் ஆலயத்தின் கருவறைக்குப் பின்னே, அதற்குச் சமீபமாக வெளியே உள்ளது. நாங்கள் அங்கு சென்ற போது அவரின் சமாதியை மீண்டும் மீண்டும் சென்று மனதார வணங்கி, தரிசித்து, வழிபட்டு மரியாதை செய்தது அவன் அருளாலே.

## எச்சரிக்கை

**கலசத்தின் பெயரால் உதவி செய்கிறோம் என்று சொல்லி, இலங்கை வாசகர் சிலரைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு சிலர் வங்கி விவரங்கள் கேட்பதாக அறிகிறோம். கலசம் யாரிடமும் இப்படியான விவரங்கள் கேட்பதில்லை. அதனால், யாருக்கும் உங்கள் பெயர் விவரங்களையோ, வங்கிக் கணக்கு விவரங்களையோ கொடுக்க வேண்டாம் என்று தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.**

**ஆசிரியர்.**

# SAIVA SCHOOL OF HINDUISM

## (By late S. Shivapathasundaram B.A)

## CHAPTER 4

# GOD

### The Conception of God

Many conventional religions have a lofty conception of God and hold almost identical views regarding His attributes. On the other hand, there are religions which have very primitive views of God, regarding Him only as a superman and attributing human frailties and weaknesses to Him, or picturing Him as a tyrant who is a slave to hatred and anger, pride and revenge. Such notions demoralise the life of the worshipper and make religion only a power for evil. Besides, even advanced religions have a popular side, which depicts God in a human form so as to appeal to the imagination of the masses. As a corrective of such notions, a list of God's attributes must find a place in religious philosophy, even if it does not help us in knowing His true nature.

### The Attributes of God

The attributes of God may be deduced from the conception of God given in the last chapter. We had to postulate the existence of God to explain the evolution of the universe, and presented Him as the director of the universe. Since He causes the evolution of the universe, He must be different from Maya, soul, and Anava, which together form the universe. Maya, we all know, possesses unlimited energy, and, as God directs all this energy, several religious philosophies hold that He has unlimited energy. But energy can be used only to overcome resistance. He has no occasion to use energy, and it would therefore be inconsistent with His Lordship of the universe to attribute power to Him. What is ordinarily understood by the possession of unlimited power is really the directing of the unlimited energy existing in the universe.

Some theologians attribute to Him omnipotence instead of unlimited power. From one point of view, omnipotence is the same as unlimited power. But the word is sometimes used to mean the power to do what is, humanly speaking, impossible. The incarnation of God is an example of this. Birth and sufferings after birth are limitations, and it is therefore as impossible for God to be born as man as it is for a circle to become a square. It would be trifling with God to attribute to Him an omnipotence which includes the performance of acts involving inconsistency. God is also believed to help His devotees in the performance of miracles by interfering with the natural course of events. This is attributing to God the human frailty of favouritism. Miracles are only acts that cannot be explained by the knowledge

available at present to the scientist. They really obey laws, and when these laws are found out by man, miracles will cease to be impressive.

Since God causes the evolution of the universe, it is inferred that there can be nothing in it of which He is not aware. Therefore He is said to be omniscient. But He does not derive His awareness as we do by observation or inference. He transcends time; and the past, the present, and the future are equally present to Him. But omniscience really falls short of a correct notion of God; for knowing is an action, and all actions imply change; whereas the idea of God implies that He is changeless. It is more correct to say that He is the source of all knowledge than that He is the possessor of all knowledge.

God is not a Being of whom any need can be predicated. There is nothing that has to be achieved by Him. He is therefore said to be a perfect Being.

If a thing undergoes change, it must be subject to some power or circumstance outside it, which compels the change. Even when a man changes his plans himself, the occasion for the change is a circumstance outside himself. Since all the circumstances in the universe owe their origin to God, there can be nothing in the universe which can control Him or compel Him to change. He is therefore said to be unchangeable. He neither thinks or desires nor acts, as each of these activities implies change.

Neither has He likes and dislikes. A person is said to like or dislike a thing according as it gives him satisfaction or the opposite. But there is nothing capable of affecting God in either of these ways. It is therefore wrong to say that God likes certain of our acts and dislikes certain others. It is just as immaterial to Him whether we worship Him or despise Him, as it is to the fire whether a man shivering with cold goes up to it and warms himself or fails to avail himself of it and continues to suffer. The Love of God goes as much to the despiser as to the lover, and in due course draws him towards God, just as the fire ultimately attracts towards itself the man who has been standing aloof and has found the cold unbearable.

Since God does not occupy space and is in no way limited by it, He is said to be omnipresent. But the word is taken to mean being present everywhere, and the question is sometimes asked how God can be everywhere, seeing that space is occupied by other things. The principle, "that two things cannot occupy the same space at the same time," is inapplicable to God, as the things spoken of in the principle are material substances which occupy space. The same error underlies the idea that there can be no reality besides God. It is argued that if souls or the worlds should be realities, God would be limited by the fact of their mere existence and become imperfect. But, strictly speaking, it is wrong even to say that God is everywhere. For, God being everywhere, implies that He occupies space. To avoid the error, some say that He is immanent in all beings, animate and inanimate. But immanence and omnipresence are equally meaningless to those of us who do not know the exact nature of God and matter.

(These so-called acts of God may create the impression that God works just as we do, and drive one to the conclusion that He undergoes change by these acts as we do by ours. Since our acts are processes in which energy is spent, they cause change in us. But God does not act as we do, and therefore His acts do not cause any change in Him)

## The Love of God

The only quality of God which we can comprehend is His lovingness. This is also the only quality the knowledge of which is of real value to us. We have seen how God's Love has given us this precious body, gives us all the knowledge and energy we require, is ever present in us and guides us in our march towards the goal. It gave the soul the crudest form of body called protoplasm and made it live.

This is itself an invaluable gift. Then it gave the soul more and more developed forms of body until the human form was reached. The love that can raise the protoplasm to the human form for the sake of the soul must be unlimited. Since this is the only quality of God that we can comprehend, our conception of God must be in terms of His love. Just as He is infinite, His love is infinite. Occasions may arise when even the mother hates the child. But God hates no one and has the same infinite love even for the most unrighteous as for the righteous, the object of the love being to make all perfect.
(“They are ignorant who say that Siva and Love are different."-Tirumantram, 270.)

## The Five Acts of God

The benefits conferred on the soul by God's Love are fivefold, and are intended to free it from the grip of Anava and to give it the means to make the fullest use of its abilities to know, to desire, and to do. The first of these is the gift of the body and the mind, of a place to live in, and of things to be known, desired, and attained. The body and the mind belong to each individual. The granting of these gifts is usually called creation. If it were not for the Love of God, there would have been no creation or evolution. The particles that form our very body would not have come together and the particles themselves would not have been formed. It is the possession of the body, and the mind that makes it possible for us even to think of ourselves.

The body that a soul received is believed to be determined by two circumstances. One of these is the condition of the soul in its relation to Anava. Anava constricts the capacities of the soul, and during evolution the constriction is gradually lessened. So the soul's relation to Anava is given by the powers of knowing, desiring, and doing it has already obtained. At a certain birth a soul possesses a certain amount of these powers. It will have to start with these and increase them further after the birth. The body that the soul receives must therefore suit the powers that it already possesses. The organs that control the body and those that are subject to them must be such as can give scope to the soul's powers.

The nature of the body is also said to be determined by the quantity and quality of past actions whose effects the soul has to experience through the body. But, as this experience is a means of counteracting Anavic constriction, the two circumstances become identical and reduce to one.

The second gift of God is the power to sustain the body. During this period of sustenance, the soul performs fresh acts and experiences pain and pleasure. In these, it is associated with a great many other souls, which also perform fresh deeds and undergo new

experiences. All these deeds and experiences must be appropriate to each of them. Sustenance is therefore a highly complex and involved function.

For example, a particular person kills hundreds of fish in a single draw of net. Several men feed on them. The fish and the men deserve their experiences brought about by the act of the particular fisherman. The sustenance of the life of Napoleon meant the death of hundreds of thousands of human beings, the upsetting of empires, and the misery or happiness of millions who were indirectly affected by his acts. A Thiruvalluvar or a Tolstoy has saved and will save many lives by their gospel of Ahimsa. Not only a single man, but a single act of a single man has often affected millions.

In all these instances the acts and experiences of those who were affected by the acts of the particular individual could not have been otherwise, and were inter-related in the large unerring scheme of things called the sustenance of the universe.

When a person experiences pain as a result of his wrongdoing, he realises the wrongness of the action and the need for avoiding it. This realisation tends to deter the man from repeating the offence, though the tendency is often counteracted by the inclination to wrongdoing due to Anavic influence. Experiencing pain is thus a twofold boon. It gives intellectual enlightenment and creates a tendency to avoid wrong doing.

Similarly, the experience of pleasure which comes of doing right gives a tangible proof of the goodness of certain acts and strengthens the resolve to act similarly thereafter. The latter of the two boons is really a power to counteract the influence of Anava. These are very valuable indirect gifts of God's Love received during life, and may be called enlightenment and suppression (of Anava) respectively. These are the third and the fourth gifts of God's Love.

The fifth gift of God's Love is disembodiment or the removal of the physical body. This happens when the body that a soul has received is no longer of any value to it. When the body has been removed, the soul gets a fresh and more suitable body. Disembodiment is thus a change that ought to be agreeable to the soul, in spite of the dread of death, which is an expression of the instincts of self-preservation and fear.

These five gifts of God's Love are usually given in the following order: embodiment (also called creation), sustenance, disembodiment (death), suppression (of Anava), and enlightenment. In the final instalment of enlightenment, the soul gets the fullest illumination and becomes divine, thus reaching the ultimate goal.

(The evolution of the soul which results from these five gifts as well as the evolution and involution of the external universe goes on without any act or effort of God, though it is due to Him. The evolution of the universe and its involution go on like the swing of the pendulum)

**(To be continued)**



# The Power of Prayer

By Sellappah Selvapaskaran

Prayer is a vehicle that helps the devotees to express their devotion to God. He is the almighty, all-pervading, and embodiment of eternal bliss. There needs to be faith in us and God will raise us. Whenever we are in dire tragedy. He pervades the entire cosmos. Nothing can happen without the will of the Almighty. This powerful Lord walks. Amid us every day. Prayer is humility combined with the simplicity of devotion. That reflects our true nature and affinity with God. Prayer allows us to realise our oneness with God. It has been said that when prayer becomes perfect, he who prays remembers not that he is praying; that he has merged into the oneness with divine. Prayer for the ultimate truth!

God resides in us and turns our eyes inward. Man has chosen to separate himself to tread his own path, which often leads him into the wilderness. Then wonders when he is lost, why he is lost, why he is so unhappy, even who has done all this to him! The truth is that he has done it to himself by choosing to ignore the omnipresent God and the love that exists everywhere as a manifestation of God. Loss of energy, loss of enthusiasm, loss of happiness and the enjoyment of life, even the desire to live, all this spring from the same cause: separation from God prayer for worldly ends do not reach God from prayer up to love. All prayers, arising from pure love, and unselfish eagerness to render service from hearts that are all-inclusive, will reach God. For, God is the very embodiment of love. We know that we can see the moon only through the moonlight, so too, God, who is love, can be realised only through love. Love is God. Live in love!

May the almighty Lord guide all of us who truly seek the "truth, along the path to surrender and surrendering, we all meet in the divine destination of 'universal love" the act of surrender to the will of God!

Sharanam! Sharanam!

May the God bless the whole world with eternal peace and goodwill.

# திருக்கோத்தும்பி



புத்தியை வண்டாகவும், இறைவனுடைய திருத்தாளைத் தேன் சொரியும் தாமரையாகவும் சொல்வது பல பெரியோர்களுக்கு இயல்பு. மணிவாசகப்பெருமான் திருக்கோத்தும்பி என்று ஒரு பதிகம் பாடியிருக்கிறார். "கோத்தும்பியே, நீ இறைவனுடைய திருவடிக் கமலத்தில் போய் ஊது" என்று சொல்வதாக அமைந்த பாடல்கள் அப்பதிகத்தில் இருக்கும். அங்கே தும்பி என்று விளித்தது மனத்தையே.

உலகத்திலுள்ள மயக்கம் தரும் பொருள்களாகிய மலத்தில் மொய்த்து விழுவதை விட்டுவிட்டு இறைவனுடைய மலர் அடியில் மொய்த்து இன்பம் பெறவேண்டுமென்ற கருத்தை அப் பாடல்களில் சொல்கிறார்.

"தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும், காண்தொறும், பேசுந்தொறும், எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக, ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி"

நன்றி: கந்தரலங்காரச் சொற்பொழிவுகள், கி வா ஜ





Banana Leaf
taste with tradition
WE CATER FOR
WEDDINGS, PUBERTY CEREMONIES,
BIRTHDAYS, ARANGETRAM & MORE
அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து
கொடுக்கப்படும்.
020 3689 2798
020 8554 4120
LFORD BRANCH - 96 Cranbrook Road, Ilford, Essex, IG1 4NH
NEWBURY PARK BRANCH - 4 Central Parade, Ley Street, Ilford, Essex, IG2 7DE
WWW.BANANALEAFUK.CO.UK
INFO@BANANALEAFUK.CO.UK
FOLLOW US
BANANA_LEAF.UK



உ

# சிவயோகம்
# SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)



## இந்து கலாசார மையம்

## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881









**சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் "சிவயோகம்" அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.**

**வங்கிக் கணக்கு விபரம் Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS**

**நன்றி**

**ஆலய நிர்வாகத்தினர்**

Muththumari Amman Temple Sivayogam



"Ammanai Saran Addainthal Athika Varam Peralam"

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

## அம்பிகையின் திருவருளை பெற

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியவர்களுக்கு

# அன்னதானம் செய்ய அரிய வாய்ப்பு




உங்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின்
பிறந்தநாள், திருமணநாள், நினைவு நாள் மற்றும்
உங்கள் இல்ல சிறப்பு விழா தினங்களில்

**அன்னதானம் செய்யலாம்...**

உங்களின் £100 பங்களிப்பு
பல பேரின் வயிறு நிரம்பி மனம் குளிரும்....
இப்புனிதப் பணியில் கைகோர்க்கும் அடியவர்களுக்கு
உதவுவதற்கு தயாராக இருக்கின்றோம்.
(அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு தின
புகைப்படம் மற்றும் காணொளி உங்களுக்கு கொடுக்கப்படும்)

**YOU CAN CONTRIBUTE FOOD**

**DONATION £100** NO ADMINISTRATION CHARGES

to Orphanages or Elders Home in Sri Lanka

on Your Birthday, Wedding Day
Remembrance Day
or Any Other Special Function




**We will be providing Photos & Video of the event to you**

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 06905358**

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்**

**Please donate as much as you can!**



SURYA JEWELLS
"உண்மை வெல்லும்"
நியாயமான வட்டி வீதத்தில்
தங்க நகைகள் அடகு பிடிக்கப்படும்
விதவிதமாய் வித்தியாசமான டிசைன்கள்
உங்கள் அழகிற்கு அழகூட்டிடும்
பழைய பவுண்களைக் கொடுத்து
புதிய நகைகளை வாங்கலாம்
அதுமட்டுமல்ல
நீங்கள் செய்யும் ஆடர்கள்
குறித்த நேரத்தில்
செய்து தருவதில் வல்லுநர்கள்
அதி குறைந்த வட்டி வீதத்தில்
வாரத்தில் 7 நாட்களும்
அடகு பிடிக்கப்படும். (2.5%)
மலிவான விலையில்
தரமான தங்கத்திற்கு
Eastham ல்
சூரியா ஜுவல்ஸ்
உங்கள் நகைகளை வேறு இடத்தில் கூடிய வட்டி வீதத்தில் அடகு வைத்திருந்தால்
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
Tel: 020 8552 2224
292 High Street North, London E12 6SA

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

### ஏப்பிரில் (15-04-2025) தொடக்கம் ஜுலை (24-07-2025) வரை

| | | |
|---|---|---|
| *21.04.2025* | திங்கள் | நடேசர் அபிஷேகம் |
| *23.04.2025* | புதன் | திருநாவுக்கரசர் குருபூசை |
| *25.04.2025* | வெள்ளி | பிரதோஷம் |
| *09.05.2025* | வெள்ளி | பிரதோஷம் |
| *12.05.2025* | திங்கள் | சித்திரைப் பௌர்ணமி |
| *24.05.2025* | சனி | பிரதோஷம் |
| *31.05.2025* | சனி | சேக்கிழார் குருபூசை |
| *08.06.2025* | ஞாயிறு | பிரதோஷம், வைகாசி விசாகம் |
| *12.06.2025* | வியாழன் | திருஞானசம்பந்தர் குருபூசை |
| *16.06.2025* | திங்கள் | தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு நாள் |
| *22.06.2025* | ஞாயிறு | பிரதோஷம் |
| *23.06.2025* | திங்கள் | கொடியேற்றம் (ஆனி உற்சவம்) |
| *29.06.2025* | ஞாயிறு | மாணிக்கவாசகர் குருபூசை |
| *01.07.2025* | செவ்வாய் | தேர் உற்சவம் |
| *02.07.2025* | புதன் | ஆனி உத்தரம், நடேசர் அபிஷேகம் |
| *07.07.2025* | திங்கள் | பிரதோஷம் |
| *16.07.2025* | புதன் | ஆடிப்பிறப்பு |
| *24.07.2025* | வியாழன் | ஆடி அமாவாசை |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Title | | Home Phone | | | |
| First Name | | Mobile No | | | |
| Surname | | Email ID | | | |
| Address | | Membership | ☐ Annual £15.00 | ☐ Life £150.00 | |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | | | |
| Post code | | | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |



# Thirukkural Stories
# திருக்குறட் கதைகள்

சாவித்திரி ஆனந்தன்

## புகழ்
## On Praise

அதிகாரம் 24 குறள் 234
Chapter 24 Kural 234

“நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு”.

பொருள் :

நிலவுலகின் எல்லையில் நெடுங்காலம் நிற்கவல்ல புகழைச் செய்தால், வானுலகம், அவ்வாறு புகழைச் செய்தாரைப் போற்றுமே அல்லாமல் தேவரைப் போற்றாது.

Meaning:

If one has acquired extensive fame within the limits of this earth, the world of the Gods will no longer praise those sages who have attained that world.

ஒரு நாள், அர்ச்சுனன் கண்ணனிடம் ஒரு கேள்வி கேட்டான்:

“எனது அண்ணன் தர்மன், தர்மம் செய்தலையே தலையாய கடமையாகக் கொண்டுள்ளான். கேட்பவர்களுக்கு இல்லை என்று மறுத்ததே இல்லை. ஆனாலும், எல்லோரும் கர்ணனைத்தானே வள்ளல் என்று புகழ்கிறார்கள். என் அண்ணனை அப்படிப் புகழ்வதில்லை. இது ஏன்?”

“கர்ணன்தான் யுதிஷ்டிரனை (தர்மன்) விடக் கொடையுள்ளம் கொண்டவன்” என்று கிருஷ்ணர் பதில் சொன்னார்.

“என்ன? நீயும் அப்படியே சொல்கிறாய்?” என்று கிருஷ்ணனின் பதிலைக்கேட்ட அர்ச்சுனன் குழப்பமடைந்தான்.

“நிரூபித்துக் காட்டவா?”, கேட்டார் கிருஷ்ண பரமாத்மா.

மகாபாரத யுத்தத்தில் தேரோட்டியாக இருந்து, தர்மத்துக்கு வெற்றி தேடித்தந்த பகவான், இந்தச் சிறிய விஷயத்தை நிரூபிக்க மாட்டாரா என்ன?

கிருஷ்ணன் ஓர் அந்தணர் போல வேடமிட்டு, அர்ச்சுனனையும் அது போலவே வேடமிட்டு வரும்படி சொல்கிறார். கிருஷ்ணர் வருண பகவானை மனதில் நினைத்த உடனே மழை கொட்டத் தொடங்கியது.

அந்தணர்கள் வடிவில் இருந்த இருவரும் யுதிஷ்டிரனுடைய மாளிகைக்குப் போகிறார்கள். அவர்களைக் கண்ட தர்மன் சகல மரியாதைகளோடும் அவர்களை வரவேற்கிறான். அர்ச்சுனன் பெருமிதத்துடன் கிருஷ்ணரைப் பார்க்கிறான்.

கிருஷ்ணர் தர்மனைப் பார்த்து,

“தருமத்தில் சிறந்த பாண்டு மகாராஜாவின் புதல்வரே! கடும் மழை பெய்வதால் எங்கள் வீட்டு விறகுக் கட்டைகள் எல்லாம் நனைந்து அடுப்புப் பற்ற வைக்க முடியவில்லை. தயவுசெய்து காய்ந்த விறகுக் கட்டைகளைத் தந்து உதவ வேண்டும்” என்று கேட்டார். இப்படிக் கேட்டுவிட்டு, கிருஷ்ணர் பார்த்தனைப் பார்க்கிறார்.

“இங்கேயிருந்த அனைத்து விறகுகளும் அரண்மனை மாந்தருக்குச் சமையல் செய்ய உபயோகம் ஆகிவிட்டது. புதிதாக மரங்களை வெட்டலாம். ஆனால் அவையும் மழையில் நனைந்துதானே இருக்கும்? என்னால் காய்ந்த விறகைத் தர முடியாது இருக்கிறது. நீங்கள் உங்கள் குடும்பத் தினருடன் இங்கே வந்து அரண்மனையில் விருந்துண்டு செல்லலாம்” என்று தருமர் சொன்னார்.

இரண்டு அந்தணர்களும் தர்மனுடைய அரண்மனையை விட்டு வெளியேறினார்கள்.

“இல்லாததைக் கேட்டால் அண்ணன் எப்படிக் கொடுப்பார்?” என்று அருச்சுனன் கண்ணனைப் பார்த்துக் கேட்டான்.

“வா அருச்சுனா!. கர்ணனிடம் கேட்போம்” என்றார் கிருஷ்ணர்.

இருவரும் கர்ணனின் மாளிகையை அடைந்தார்கள். கர்ணனும் சகல மரியாதைகளுடன் அவர்களை வரவேற்றான்.

“எங்கள் வீட்டு அடுப்பு எரிவதற்குக் காய்ந்த விறகுக் கட்டைகள் தந்துதவ வேண்டும்” என்று அந்தணர் வடிவிலிருந்த அர்ச்சுனன் கர்ணனிடம் கேட்டான்.

“எல்லா மரங்களும் மழையில் நனைந்து விட்டனவே. நான் என்ன செய்வது?” என்று ஒரு வார்த்தை கூடக் கர்ணன் கூறவில்லை. மாறாக, உடனே தனது வில்லைக் கையில் எடுத்து அதில் நாணேற்றினான் கர்ணன். என்ன செய்யப் போகிறான் கர்ணன்? என்று வியப்போடு இவர்கள் பார்க்க -

அரண்மனையின் கதவு, யன்னல் யாவற்றையும் நோக்கி அம்பைக்குறி வைத்து எய்ய - அவை யாவும் கீழே விழுந்து உடைந்தன.

அர்ச்சுனன் அதிர்ச்சியாகி விட்டான்.

உடைந்த மரத்துண்டுகளை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து அள்ளிவந்து இவர்களிடம் கொடுத்து, “இனி உங்கள் அடுப்பு எரியும்” என்று கர்ணன் என்ற அந்தக் கொடை வள்ளல் கூறினான்.

தனது கேள்விக்கான பதிலை அர்ச்சுனன் புரிந்துகொண்டிருப்பான்.

One day Archuna asked Krishna:

‘My brother Dharman, does charity as main part of his life. He never refuses any one any help when people ask. Eventhough all the people praise Karnan as the best philanthropist and not my brother Dharma. Why is that?’

Krishna replied, ‘Karna’s philanthropic attitudes are much better than those of Dharma’s’.

‘Why is that? You are also thinking like others?’, Archuna asked, highly upset by Krishna’s reply.

‘Shall I show you why?’ asserted Lord Krishna.

During the Mahabhratha war, the one who served as a charioteer for Archuna, gained victory for justice, and he would definitely prove that, Archuna thought.

Krishna transformed himself into the guise of a Brahmin and asked Archuna, to do the same.

When Krishna prayed Varna – the God of rain, heavy rain poured. Both Krishna and Arjuna got soaked in the rain.

Both Brahmins went first to Dharma’s palace. (Yuthistra)

Dharma welcomed both with all due respect. Archuna looked at Krishna with pride seeing his brother’s actions.

Krishna asked Dharma, ‘Oh! King Pandu’s great son!, the famous philanthropist, due to this heavy rain, all the firewood that we had, got wet and we couldn’t cook any food, nor we could keep our fire place warm. Please offer some firewood for us, so that we can cook.’

Dharma, after a pause and brief thought, replied:

‘All the firewood here were used to cook food for the people of the palace. Fresh firewood could be cut, but those would be of no use, as they would also be wet by now… , I am unable to provide dry fire wood right now. As an alternative, I can offer you food. Please come and bring your family here, so that all of them can have food and keep warm.’

On hearing this, Krishna looked at Archuna and said, ‘Come Archuna .. let us visit Karna and ask him’
Both Krishna and Arjuna, in their guise as Brahmins, arrived at Karna’s palace.

On seeing the two brahmins, Karnan happily welcomed them with all due respect and asked them what he could do for them.

Archuna asked him,

'Would you please help us by offering some dry firewood so that we can use  to keep our fire place warm and cook some food?'

Karna, without saying  a word, took his bow and arrow at once and started aiming at the doors and windows of his palace. All the doors and windows were shattered and fell on the floor.

Archuna  was highly surpridsed by what Karna did.

Archuna stood still, highly shocked to see this. Karna gathered all the broken pieces of wood, and gave it to them, saying - 'Your fireplace will now burn! and you can cook your food,'

Krishna looked at Archuna with a meaningful smile on his face.

Archuna got the perfect answer for his question and had his doubt cleared.

***

# ஈகை

வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. *221*

வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது. மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது.

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. *223*

யான் வறியவன் என்னும் துன்பச் சொல்லை ஒருவன் உரைப்பதற்குமுன் அவனுக்குக் கொடுக்கும் தன்மை, நல்ல குடிப்பிறப்பு உடையவனிடம் உண்டு.

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்டல் அரிது. *227*

தான் பெற்ற உணவைப் பலரோடும் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவனைப் பசி என்று கூறப்படும் தீய நோய் அணுகுதல் இல்லை.

# இராசன் வாத்தியார்

முத்து

இராசன் வாத்தியார் மூன்று மாதங்களாகத் தமிழ்ப்பள்ளிக்கு வரவில்லை. தனது சொந்த ஊர் போனமைதான் காரணம். பத்து வருடத்திற்கு மேலாகத் தான் பிறந்த இடமான யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள ஊரான தாவடிக்குப் அவர் போகவில்லை. போகக் கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. அங்கு நடைபெற்ற சம்பவங்கள் அவர் மனதை நோகடித்திருந்தன. இப்போது அங்கு அமைதியான சூழ்நிலை உருவாகியதால் அவரது உறவினர்களும், நண்பர்களும் போய்வந்து மகிழ்ந்த செய்திகள் அவரது மனதில் ஆவலைத் தூண்டின. அவரது சிறுவயதில் தம் சொந்தப் பிள்ளைகளுடன் கூடி விளையாடி மகிழ்ந்த இனிமையான நினைவுகள் அவரது மனத்திரையில் ஓடின. அவர் பக்தியுடன் வழிபட்ட பிள்ளையார் கோயில், கந்தசாமி கோயில், அம்மன் கோயில். அவர்கள் அருளால் தான் படித்துப் பட்டம் பெற்றுத் தொழில் பார்த்தது எல்லாம் நினைவுக்கு வர, அங்கே போய் அந்தத் தெய்வங்களுக்கு நன்றி கூறும் வகையில் பூசை செய்து வழிபட வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்ற உடனே புறப்பட்டுப் போனார். அப்படிப் போனவர், தான் விரும்பிய இடங்கள் எல்லாம் சுற்றிப்பார்த்து, உறவினர்களுடனும், நண்பர்களுடனும் கொண்டாடி மகிழ்ந்து இலண்டன் திரும்பினார்.

கார்த்திகை மாதம் போய், தைமாதம் வரை இருந்து, பொங்கலையும் அங்கே பழைய சம்பிரதாயப்படி கொண்டாடிய பின்பே தனது இலண்டன் வீட்டுக்குத் திரும்பினார். இன்றுதான் பள்ளிக்கு வந்தார். அவரைக் கண்டதும் மாணவர்கள் மிக ஆரவாரத்துடன் எழும்பி ஓடி வாசலுக்கு வந்து அழைத்துச்சென்று அவரைச் சுற்றி நின்று ஆவலுடன் அன்பு பொங்கப் பார்த்தார்கள். வாத்தியாருக்குக் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து முகத்தில் உருண்டோடியது. மாணவர்கள் கவலையுடன் “சேர் ஏன் அழுகிறீர்கள்?” என்று கேட்டார்கள். வாத்தியார் சிரித்தபடி கண்ணைத் துடைத்துக் கொண்டு “இது ஆனந்தக் கண்ணீர் பிள்ளைகளே.!” என்றார்.

அமுதா: அப்படியென்றால் என்ன சேர்? கண்ணீர் அழும் போதுதானே வரும்!

வாத்தியார்: இல்லை அமுதா! சந்தோஷம் மிகுதியானாலும் கண்ணீர் வரும். உங்களைக் கண்டவுடன் எனக்கும் அளவில்லாத ஆனந்தம் (மகிழ்ச்சி). இப்போது எல்லோருக்கும் அன்பான வணக்கம். இருங்கோ பிள்ளைகளே.

மாணவர்கள்: நாங்களும் உங்களைக் கண்ட சந்தோஷத்தில் வணக்கம் சொல்ல மறந்து விட்டோம் சேர்.

வாத்தியார்: அதற்கும் பொருத்தமான அழகான திருக்குறள் ஒன்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அது யாருக்காவது தெரியுமா?

மாணவர்கள்: இல்லையே சேர். சொல்லுங்கோ சேர்!

வாத்தியார்: “அன்புக்கும் உண்டோ அடைக்கும்தாள் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.”

ஆசிரியர் அந்தக் குறளைச் சொல்லி, மாணவர்களையும் சொல்லும்படி கூறுகிறார். பின்பு ஆசிரியர் அதனைக் கரும்பலகையில் எழுதுகிறார்.

மாணவர்கள்: அதன் அர்த்தத்தையும் சொல்லித் தாருங்கோ சேர்.

ஆசிரியர்: அதன் கருத்து ஏதாவது விளங்கியதோ பிள்ளைகள்?

கண்ணன்: அன்பு, கண்ணீர் இரண்டு சொல்லும் எனக்கு விளங்கியிருக்கு சேர்.

வாத்தியார்: எல்லோருடைய மனதிலும் அன்பு இருக்கு. ஒருவர் தன்னோடு மிகுந்த அன்புள்ள நண்பருக்கோ, உறவினருக்கோ துன்பம் வரும் போது அவர்களது துன்பத்தைக் கண்டதும் கண்ணீர் பெருக நிற்பார்கள். ஏனென்றால் கண்ணீரை மனதில் பூட்டி (அடக்கி) வைக்க முடியாது. அவர்களையறியாது கண்ணீர் வரும். அன்பு என்ற உணர்வு (feeling) எப்படி என்பதை இந்தக் குறளில் கூறுகிறார்.

மாணவர்கள்: இப்போது எங்கள் எல்லோருக்கும் நல்லாவே விளங்கிவிட்டது சேர். இப்போது நீங்கள் ஊரில் எங்கெல்லாம் போனீர்கள்? என்னவெல்லாம் பார்த்தீர்கள்?

வாத்தியார்: எனது பழைய நண்பர்களை, என் உறவினர்களை எல்லாம் சந்தித்துக் கதைத்துச் சிரித்து மகிழ்ந்தோம்.

ராம்: என்னவெல்லாம் கதைத்தீர்கள்?

வாத்தியார்: எனது நண்பர்கள் எல்லோரும் என்னைக் கண்டவுடன் மிகச் சந்தோஷத்துடன் ஓடிவந்து கட்டியணைத்தனர். ஒவ்வொரு நாளும் நீண்ட நேரம் பழைய கதைகள் (சின்ன வயதில் நடந்தவை, பள்ளியில், பல்கலைக் கழகத்தில் செய்த பகிடிகள், குறும்புகள் எல்லாவற்றையும் திரும்ப நினைத்துச் சிரித்தோம். தவறுகளுக்காகக் கவலைப்பட்டோம்.

அமுதா: நீங்களும் சின்னப்பிள்ளையில் எங்களைப் போலத்தான் இருந்திருக்கிறீர்கள் சேர்.

வாத்தியார்: ஆமாம் எல்லோருமே அப்படித்தான் அமுதா. ஒவ்வொரு வயதிலும் வேறு வேறு விதமாக இருந்திருப்போம்.

கண்ணன்: என்ன இடங்கள் பார்த்தீர்கள் சேர்?

வாத்தியார்: எனது நண்பர்கள் வாடகை வண்டி ஒன்று ஒழுங்கு செய்தார்கள். அதில் நாடு முழுவதும் எல்லோரும் சுற்றிப் பார்த்தோம். நாடு முழுவதும் மாறி இருப்பதைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டேன். முதலில் யாழ்ப்பாணத்தில் உள்ள கோயில்கள் எல்லாம் போனோம்.

அமுதா: எந்தக் கோயில் முக்கியமானது சேர்? எத்தனை கோயில்கள் போனீர்கள்? ஒவ்வொரு ஊரிலும் 3, 4 கோயில்கள் இருக்கும் என்று பாட்டி சொன்னா. அவவின் ஊரில் 6 கோயில்கள் இருக்காம். 2 பிள்ளையார் கோயில், 2 அம்மன் கோயில், 2 முருகன் கோயில், ஒரு வைரவர் கோயில்.

வாத்தியார்: ஓமோம் அமுதா நீ சொல்வது சரிதான். நான் முக்கியமான கோயில்களுக்கும் எங்கள் வீட்டிற்குப் பக்கத்திலுள்ள கோயில்களுக்கு மட்டுமே போனேன்.

கண்ணன்: நீங்கள் எந்தெந்தக் கோயில்களுக்குப் போனீர்கள் சேர்.

வாத்தியார்: சரி. ஞாபகத்தில் வருவதைச் சொல்கிறேன், கேளுங்கள்! யாழ்ப்பாண நகரத்திற்குக்கிட்ட இருப்பது நல்லூர் முருகன் கோயில். இது ஒரு பிரபலமான கோயில். தேர்த்திருவிழாக் காலத்தில் எல்லா ஊர்களிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வருவார்கள். பார்க்கச் சந்தோஷமாக இருக்கும். கோயில் உள்ளுக்குப் போகமுடியாத நெரிசல். இங்கு நான் போயிருந்தேன். அப்போது திருவிழாக் காலம் இல்லாததால் வசதியாகக் கும்பிடமுடிந்தது.

ராம்: நான் போன வருஷம் யாழப்பாணம் போனபோது தாத்தா பாட்டி என்னைக் கூட்டிக்கொண்டு போனார்கள். பெரிய அழகான கோயில் அழகான உயரமான கோபுரம். அதில் சின்னச் சிலைகள். அழகாகப்பல நிறங்கள் உள்ள பொம்மைகள் போல இருந்தன.

வாத்தியார்: அவையெல்லாம் புராணக் கதைகளைச் சொல்வன ராம். பிள்ளையாரும் முருகனும் மாம்பழத்திற்குச் சண்டை போட்டது. முருகன் வள்ளியம்மனைத் திருமணம் செய்தது. அடுத்தமுறை போனால் தாத்தா பாட்டியைக் கேள், அவர்கள் சொல்வார்கள்.

ராம்: ஓம் சேர். நான் அதன் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

வாத்தியார்: இப்போது நீங்கள் சிறுவர்கள். 20 வயதுக்குப்பிறகு போகும் போது நீங்களாகவே தெரிந்து கொள்வீர்கள்.

அமுதா: கீரிமலை என்ற இடத்திற்குப் போனீர்களோ சேர்? அங்கு போய், முன்பு இறந்தவர்களுக்காகக் குளித்துச் சுவாமி கும்பிடுவார்களாமே சேர்!

வாத்தியார்: அது உண்மைதான். யாழ்ப்பாணத்தில் அப்படிச் செய்வது வழக்கம். இலண்டனில் இருப்பவர்களும் சிலபேர் அங்கு போய்ச் செய்திருக்கிறார்கள். நீங்கள் கொஞ்சம் வளர்ந்த பின்பு மேலும் விவரமாகத் தாத்தா பாட்டியையோ அம்மா அப்பா வையோ கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இப்போது வகுப்பு முடியும் நேரம் அல்லவா?

கண்ணன்: இன்னும் கொஞ்ச நேரம் இருக்கு சேர். இன்னும் இரண்டு கோயில்கள் பற்றிச் சொல்லுங்கோ.

வாத்தியார்: சரியான கெட்டிக்காரன் நீ கண்ணா. அடுத்து எனக்குப் பிடித்த கோயில் மருதடிப் பிள்ளையார் கோயில். கோயிலைச் சுற்றி வயல்கள் இருக்கின்றன. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பச்சைப்பசேலென்று அழகாக இருக்கும். பக்கத்தில் தாமரைக் குளம். அதில் நிறையத் தாமரைப்பூக்கள் மலர்ந்தும், மொட்டுக் களாகவும் இருக்கும்.

அமுதா: என்ன நிறமாக இருக்கும்? தண்ணீருக்குள் வளர்ந்து பூக்குமா சேர்?

வாத்தியார்: ஆமாம் அமுதா! தாமரை தண்ணீரில் வளரும் என்று மூன்றாம் வகுப்பில் படித்திருப்பாயே? மறந்துவிட்டாயா?

அமுதா: ஓம் சேர் மறந்துவிட்டேன். நீங்கள் சொன்னவுடன் ஞாபகத்திற்கு வந்துவிட்டது. வெள்ளைத்தாமரை, செந்தாமரைப்பூக்கள் என்று படித்தோம். அல்லியும் தண்ணீரில் வளரும்.

வாத்தியார்: படித்ததை இடைக்கிடை நினைத்துப் பார்க்கலாம். அவையெல்லாம் மூளையில் பதிவாகி இருக்கும். நீங்கள் வளர்ந்து ஊரைச் சுற்றிப் பார்க்கும் போது எல்லாமே ஞாபகத்துக்கு வரும். மூன்றாம் வகுப்பில் வாத்தியார் எனக்குச் சொல்லித்தந்த பாடல் ஒன்று ஞாபகம் வருகிறது. பிள்ளைகள் கேட்கப் போறீர்களா?

மாணவர்கள்: உண்மையாகவா? சொல்லுங்கோ சேர். கேட்க ஆசையாக இருக்கு.

வாத்தியார்: சரி பிள்ளைகள் கேளுங்கோ.
“அருணன் உதித்தது அம்புஜம் விண்டது
அளிகளும் மொய்த்தன பாராய்!
அம்மா எழுந்தோடி வாராய்!

இப்போது யாருக்கு என்ன விளங்கியது என்று சொல்லுங்கோ பிள்ளைகளே?

அமுதா: “அம்மா குழந்தையை எழும்பி ஓடி வா” என்று சொல்கிறா போல் தெரியுது சேர். பிள்ளை விளையாடிக்கொண்டிருக்குமோ சேர்.

வாத்தியார்: அப்படியும் இருக்கலாம். ஆனால் எங்களுடைய வாத்தியார் நித்திரை கொண்டு இருக்கும் பிள்ளையைத் தாய் எழுப்புவதாகச் சொல்லித் தந்தவர் என்ற ஞாபகம் தான் மனத்தில் இருக்கிறது. பாட்டின் கருத்தைக் கேளுங்கள். அருணன் என்பது சூரியனுக்கு உள்ள இன்னும் ஒரு பெயர். அம்புஜம் என்றால் தாமரைப்பூ. அளி என்றால் தேனீக்கள். (வண்டுகள்) விண்டது பூ மலர்ந்ததைக் கூறுகிறது.

கிருஷ்ணா: பாட்டின் கருத்தை முழுவதும் சொல்லுங்கோ சேர்.

வாத்தியார்: சரி கிருஷ்ணா! நான் உங்களில் யாருக்காவது புரிந்திருக்குமோ என்று பார்த்தன். சூரியன் உதிக்கிறது. சூரியனைக் கண்டதும் பூக்கள் எல்லாம் மலரும். மலரிலிருந்து தேன் எடுக்க வண்டுகள் வந்து மொய்த்து நிற்கின்றன. (ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றன).

ராம்: தாய் பிள்ளையை எழுப்புவதற்கு ஏன் இப்படியெல்லாம் சொல்கிறா சேர்?

வாத்தியார்: சூரியன் உதிக்கும் முன்பே பிள்ளைகள் நித்திரைவிட்டு எழும்ப வேண்டும். பின்பு காலைக்கடன் முடித்ததும் சுவாமி கும்பிடத் தயாராக வேண்டும். ஆனால், அந்தப்பிள்ளை சூரியன் உதித்து மேலே வந்துவிட்டது. எழும்ப வேண்டிய நேரத்திற்கு எழும்பவில்லையே. ஏன் இப்படித் தூங்குகிறாய் பிள்ளாய் எழும்பி

ஓடிவா. அப்போதுதான் குளித்து, வெளிக்கிட்டுச் சுவாமி கும்பிட்டுப் பின் சாப்பிட்டுப் பள்ளிக்குப் புறப்படலாம் என்பதற்காக அம்மா அன்பாகக் கூப்பிடுகிறா. பிள்ளைகள் உங்கள் வீட்டில் காலையில் என்ன நடக்கும்?

ராம்: அம்மா 5 மணிக்கே அலாரம் வைத்து விடுவா. எழும்பாவிட்டால் முதல் அன்பாகக் கூப்பிடுவா. பின் சத்தம் போடுவா.

அமுதா: அம்மா ஒன்பது மணிக்கே படுக்கைக்கு அழைத்துச் சென்றுவிடுவா. நான் நித்திரை கொள்ளும் வரை கதை சொல்லுவா.

கிருஷ்ணா: அப்பா மிகவும் கண்டிப்பானவர். அவர் வேலைக்குப் போவதால் நாங்கள் அவர் எழும்பியவுடன், நாங்களும் எழும்ப வேண்டும் குளிக்க வேண்டும். அவர் குளிக்க முன்பு நாங்கள் குளிக்க வேண்டும்.

கண்ணன்: நான் பாட்டியுடன் படுக்கப் போவேன். அவ என்னை எழும்பச் செய்து குளிக்க வைப்பா.

வாத்தியார்: வீட்டில் பெற்றோர் பாட்டி எழுப்புகிறார்கள். இனி நீங்களே படுக்கும் போது எத்தனை மணிக்கு எழும்பினால் நல்லது என்று யோசித்துப் பழக வேண்டும். அது பழக்கமாகிவிடும்.

மாணவர்கள்: அப்படியே செய்வோம் . இன்று நீங்கள் கோயில்களைப்பற்றி எல்லாம் அழகாச் சொல்லித் தந்தீங்க சேர். எங்களுக்கும் அங்கே போய் எல்லா இடமும் பார்க்க வேண்டும்போல ஆசையாக இருக்கு.

வாத்தியார்: ஆமாம் பிள்ளைகளே அதனால் தான் ஔவையாரும் “ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்று சொல்லியிருக்கிறார். அதைப்பற்றி அடுத்த வகுப்பில் படிப்போம்.

மாணவர்கள் (எழுந்து நின்று) கைதட்டுகிறார்கள், வாத்தியார் முகம் மலரச் சிரித்து ஆசீர்வதிக்கிறார்.



# சேக்கிழார் பெருமான்
# சைவ சமயத்தில் ஏற்படுத்திய மறுமலர்ச்சி

திரு க செல்வரத்தினம்

மனிதன் உணவு, உடை, உறையுள் என்ற மூன்றுடன் மட்டுமே வாழ்வதில்லை; உணர்வு தான் வாழ்வின் உயிர் நிலை. எனவே மனத்தை மாசில்லாமல் ஆக்குவதே சமயத்தின் கடமையாகும்.

தேவார திருவாசகங்களைத் திருமுறைகளாகவும், சிவனடியார்களைப் போற்றும் புராணப் பாடல்களை மகாகாவியமாகவும் சைவ உலகம் கொண்டாடி வருகிறது. அந்தக் காவியத்தை; திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் எழுதியருளினார். கலாசார பண்பாட்டு விழுமியங்களை நிலை நிறுத்தியது மட்டுமல்லாமல் தமிழ் மொழியில் வெளி வந்த முதல் சைவக் காவிய நூலாக இதுவரக் காரணமானார். வடமொழி மகாகாவியங்களான மகாபாரதம் இராமாயணம் என்பவை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டவை. அவை வழி நூல்களே. இறைத்தொண்டு செய்த அடியார்கள் பற்றிய புராணம் மட்டும் முதல் நூலாக, பெரியபுராணம் எனக் கொள்ளப்படுவது பெருமைக்குரியது.

சேக்கிழார் பெருமான் முதலமைச்சராக இருந்த வேளை, கதைகள் கூறி மன்னனை மகிழ்விக்க பல சான்றோர் அரசசபை வந்து போவது வழக்கமாக இருந்தது.. தகுந்த வாய்ப்புக்குக் காத்திருந்த சேக்கிழார் பெருமான், அக் கதைகளுக்குப் பதிலாக சிவக் கதைகளைக் கேட்பது சிறந்தது என சில நாயான்மார்களின் வரலாற்றைக் கூறி நுட்பமாக மன்னனின் கவனத்தை தமது பக்கம் ஈர்த்தார்.

சேக்கிழார் பெருமான் சுந்தரமூர்த்திநாயனாரின் திருத்தொண்டர் தொகையில் உள்ள 11 பாடல்களில் உள்ள 60 நாயன்மார்களை அடிப்படையாக அமைத்து, நம்பியாண்டார் நம்பி அவர்களின் திருத்தொண்டர் திருவந்தாதி செய்திகளையும் சேர்த்து, கள ஆய்வுகளையும் மேற்கொண்டு இக்கைங்கரியத்தை நிறைவு செய்தார். .அத்துடன் சுந்தரர், அவரது தாயார் இசைஞானியார், அவரது தந்தையார் சடையனார் மூவரையும் சேர்த்து, 63 தனிஅடியார்களுடன் 9 தொகை அடியார்களையும் பாடியுள்ளார். இக்காவியம் சுந்தர மூர்த்தி நாயனாரில் தொடங்கி சுந்தரமூர்த்திநாயனார் ஆலால சுந்தரராகத் திருக்கைலாயம் வரும் வரை அமைக்கப்பட்டுள்ளது. சுந்தரரே காப்பியத் தலைவராகவும் உள்ளார்.

ஒருமுறை சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர் ஆலயம் சென்று எம்பெருமானை வணங்கும் போது அடியார் கூட்டத்தை கவனிக்காமல் உள்ளே சென்றமையால் அவரை சைவ சமயத்தில் இருந்து ஒதுக்கி வைத்ததோடு அவரைக் கண்டிக்காத இறைவனையும் புறம்பு எனத் தள்ளிவைத்தது அடியார் கூட்டம். அப்போதுதான் திருத்தொண்டத் தொகை உருவானது.

சேக்கிழார் நூலை ஆக்க, அரச பணியில் இருந்து நீங்கி, தில்லை சென்று இறைவன் “உலகெலாம்” எனும் அடி எடுத்துக் கொடுக்க, “உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்” எனத் தொடங்கி, “நின்றது எங்கும் நிலவி உலகெலாம்” என 4286 ஆம் பாடலோடு நிறைவு செய்கிறார்.

கைலாயத்தில் வீற்றிருப்பவர் எம் பெருமான். அங்கே உமாதேவியார், நந்தி எம்பெருமான், நாரதமுனிவர், பூதகணங்கள், பதஞ்சலிமுனிவர், வியாக்கிரகபாதர் என முனிவர்கள் போன்றோர் இருக்கிறார்கள். உபமன்யு முனிவர் பாடம் நடத்துகிறார் ( இவர் வியாக்கிரகபாதர் முனிவரின் மகன். குழந்தையாக பாலுக்கு அழுதபோது எம் பெருமான் பாற்கடலையே அருளும் பேறு பெற்றவர்) பாடம் நடத்திக் கொண்டு இருக்கையில், தென் திசையில் இருந்து ஒளி ஒன்று கைலாயம் நோக்கி வருவதைக் கண்டு எழுந்து வணங்கி நின்றார். பெரியபுராணம் தொடங்குவது இந்த நிகழ்வோடுதான்.

**சேக்கிழார் காலச் சமூக அமைப்பு:**

சேக்கிழார் வேளாள குலத்தைச் சேர்ந்தவர். அறிவிலும் செல்வத்திலும் உயர்ந்த நிலையில் வாழ்ந்து வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது பிள்ளைத் திருநாமம் அருண் மொழித்தேவர். தந்தையார் மன்னன் அரச சபையில் கடமை ஆற்றி வந்ததால் வசதியான பின்னணியைக் கொண்டவர். தந்தையார் சிவபக்திகொண்டவர். ஆலயம் செல்லும் பொழுது மகனையும் அழைத்துச் செல்வார். ஐந்து வயதிலேயே தந்தையார் பாடும் தேவாரங்களை நினவுபடுத்திப் பாடும் ஆற்றலை வளர்த்துக் கொண்டவர். பாடசாலை ஆசிரியரும் உதவியாக அவருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து வந்தார். மன்னனும் அறிவில் சிறந்தவர்களையே நியமிப்பது வழக்கமாகக் கொண்டவர். தந்தையார் அரச சபையில் வேலை செய்ததால் வழிகாட்டி வந்தார் அருண்மொழித்தேவர் பாடப் புத்தகங்களை விட மேலதிகமாகத் திருவள்ளுவர், ஔவையார் போன்றோரின் நூல்களையும் கற்று வந்தார்.

மன்னவன் அவையில் கடமை புரிந்த சேக்கிழாரின் தந்தையாரால் மன்னன் கேட்ட வினாக்களுக்கு விடை கூறவியலாமல் இருக்க, சேக்கிழார் பதில் கூறி முதல் அமைச்சரானார்.

நெஞ்சு நிறை பக்தியுடன் சிவனை வணங்குகிறோம். கல்வியானது அறிவை வளர்க்கிறது. பக்தி மனதைப் பண்படுத்துகிறது. சிவத்தொண்டு செய்வதே பிறவிப் பெருங்கடலைக் கடக்க உதவும் என அடியார்கள் தம்மை அர்ப்பணித்தனர். 63 அடியார் கதைகளில் பன்முக வெளிப்பாடு காணப்படுகிறது.

அப்பர் பெருமான் உழவாரப் பணிசெய்தார். மழையிலும் அர்த்தசாமத்தில் விதை நெல்லை ஒவ்வொன்றாகப் பொறுக்கி அவற்றை இல்லாளிடம் சேர்ப்பித்து அடியவருக்கு அமுது படைத்தவர் இளையான் குடி மாறன். மலர் கிடைக்காததால் கல்லை மலராக நம்பி, கல்லால் அடித்தவர் சாக்கிய நாயனார். கல்லென நினைத்திருந்தால், கண்ணப்பர் மாமிசத்தை ஊட்டியிருக்க முடியாது. காலால் மிதித்து, கண்ணைத் தோண்டிக் கொடுத்தவர் அவர். மகனைக் கறிசமைத்துப் படைத்தவர் சிறுத்தொண்டர். தாரத்தை தானமாக அளித்தவர் இயற்பகை நாயனார். கடவுளையே காதலுக்காக தூது விட்டவர் சுந்தரர். வேறு பெண்ணிடம் சென்ற குற்றத்திற்காக மனதாலும் எந்தப் பெண்ணையும் நினையாமல் வாழ்ந்தவர் திருநீலகண்டர்.

சோதனைக்கு ஆட்படும்போது அவர்கள் பட்ட துயரத்தின் உயரமும் அவலத்தின் ஆழமும் நாம் உணரும் போது சிந்தை உருகிறது. வள்ளுவப் பெருந்தகை இவர்களின் செயல் ஈத்துவக்கும் இன்பம் என்கிறார். கொடுப்பதிலே மன நிறைவு கண்டவர்கள் அடியார்கள்.

**சேக்கிழார் வெளிக்கொணரும் பண்பாட்டு கலாசார விழுமியங்கள்:**

அவளை அவர் என மாற்றம் பெறச் செய்தவர் சேக்கிழார். ஆணை அவர் என்று அழைக்கும் போது பெண்ணையும் அவர் என அழைக்கும் மாண்பு சேக்கிழார் ஏற்படுத்திய பெரு மாற்றமாகும். சாதாரண பெண் அடியார்களோ பெண் நாயன்மார்களோ என்று பாராது பெண்ணை அவர் என ஏற்றி வைத்துள்ளார். இன்றும் இம்மாற்றம் முழுதுமாக மாறவில்லை.

உலகில் பெரியது தொண்டர் உள்ளமே என ஔவையார் முருகப் பெருமானிடம் கூறியதை நினைந்து சைவ உலகம் பெரிய புராணத்துக்கு வலுச் சேர்த்துள்ளது.

இளையான்குடி மாறநாயனார் நான்கு வித, ஆறு சுவைகொண்ட 24 (plates) தட்டுகள் அடியவருக்குப் பரிமாறினார்.

"....உண்டி நாலு விதத்தில் ஆறு சுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்து உளார்"
இளையையான் குடிமாறர் புராணம் - பாடல் 4

ஆறு சுவைகள்: கைப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு.
நால்வகை உண்டி: உண்ணல், தின்னல்( முறுக்கு), நக்கல் (பாயசம்), பருகல்.
24 வகை சுவைகளுடன் தட்டுக்கள் பரிமாறப்பட்டன

ஆலயத்தில் வீழ்ந்து வணங்கும் முறை தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்வதே முறை. அதைச் சேக்கிழார் எடுத்துக் காட்டியுள்ளார்.

"....ஏடுலாம் மலர்தூவி எட்டினோடு ஐந்தும் ஆகும் உறுப்பினால்
பீடுநீடு நிலத்தின் மேல் பெருகப் பணிந்து வணங்கினார்"
ஏயர் கோன் கலிக்காம நாயனார் புராணம் - 98

பாமரர் முதல் பார் ஆளும் மன்னனும் பின்பற்ற வேண்டிய நெறி:
தற்காலத்தில் பொதுச் சொத்தைச் சுய இலாபத்துக்குப் பயன்படுத்தி, வெளிநாடுகளில் பதுக்கி வைப்போர் போலன்றி, பார் ஆளும் மன்னர் பின்பற்றவேண்டிய நெறிக்கு மூர்த்தி நாயனார் ஓர் எடுத்துக்காட்டு. விலைமதிப்பற்ற ஆடை, அணிகலன்களைத் தவிர்த்து, சிவ சின்னங்களைத் தரித்து சிக்கனமாக மூர்த்தி நாயனார் ஆட்சி செய்வதைச் சேக்கிழார் பெருமான் காட்டுகிறார்.

வையம் முறை செய்குவன் ஆகில்வயங்கு நீறே
செய்யும் அபிடேகமும் ஆக செழுங் கலன்கள்
ஐயன் அடையாளமும் ஆக அணிந்து தாங்கும்
மொய்புன் சடைமா முடியே முடியாவது என்றார்
மூர்த்தி நாயனார் புராணம் - 41

பக்திவைராக்கியம் மூலம் தெய்வ அருள் பெறலாம்:
"..காலனை மார்கண்டர்க்காக் காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலம்நின் புகழே யாக வேண்டும்....." திருஞானசம்பந்தர் புராணம் - 740

பகைவனுக்கும் அருள்வாய் நன் நெஞ்சே!
மெய்ப்பொருள் நாயனார் தன்னை வீழ்த்திய முத்தநாதனின் கொலைச் செயலால் துடித்த தருணத்திலும் எதிரியைப் பாதுகாத்து விடச்செய்த அருள்நிலையை என்னென்பது!

"... எம்பிரான் அடியார் போக
மீது இடை விலக்கா வண்ணம் கொண்டு போய் விடு நீ என்றார்
மெய்ப் பொருள் நாயனார் - புராணம் - *17*

மண் ஓட்டையும் செம்பொன்னையும் சமமாக மதித்ததோடு முத்தியையும் துறக்க விரும்பும் அடியவர்கள் வாழ்ந்தனர்:

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்
திருக்கூட்டச் சிறப்பு - *8*

திருஞான சம்பந்தரால் தமிழ்மொழி, தமிழ் இசை, மெய்யறிவு வளர்ச்சி ஏற்பட்டது.

திசையனைத்தின் பெருமை யெலாம் தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல
அசைவு இல்செழும் தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல
இசைமுழுதும் மெய் அறிவும் இடம் கொள்ளும் நிலை பெருக
திருஞானசம்பந்த சுவாமிகள் - புராணம் - *24*

பூசைக்குத் தடை வந்தால் தந்தை யெனினும் தண்டனை தான்.

".....ஈன்ற தாதை விழ எறிந்தாய்
அடுத்த தாதைஇனிஉனக்கு நாம்...."
சண்டேசுரர் நாயனார் புராணம் - *54*

சைவத்தின் தனிச் சிறப்பு

செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கு இல்லையென
உய்வகையால் பொருள் சிவன் என்று அருளாலே உணர்ந்து அறிந்தார்
சாக்கிய நாயனார் - *5*

சேக்கிழார் பெருமானின் குரு பூசைத் தினம் வைகாசி மாதம் பூச நட்சத்திரமாகும். பெரியபுராணத்தில் சேக்கிழார் சிறப்பை, "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" என்று மகாவித்வான் மீனாட்சிசுந்தரனார் பாராட்டியுள்ளார். அத்தகைய பெருமானின் குரு பூசை நாளை அநுட்டிப்பதோடு அவரது கருத்துக்களை ஓதி உய்வோமாக!

# துவஜாரோகணம்

மகோற்சவ ஆரம்பத்திலே கொடியேற்றல் ஆகம சம்மதமாம் மும்மலத்திலே மூழ்கிக் கிடக்கின்ற ஆன்மா ஆசாரியருடைய அருளால் தீக்ஷா கிரமத்தினாலே பாசபந்தமற்றுச் சிவஞானத்தைப் பொருந்திய பதியின் திருவடியை அடையும் முறையைத் துவஜாரோகணம் காட்டும். அஃது எவ்வாறெனில் காரணம் முதலிய சிவாகமங்களிற் கூறியவாறு:

கொடிமரம் பதியாகி சிவபெருமானையும், கொடிக்கயிறு திருவருட்சக்தியையும், கொடிச்சீலை பசுவையும், தருப்பைக்கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆன்மா பாச பந்தம் நீங்கி, சிவபெருமானை அடையுமிடத்துத் திருவருட்சக்தி வாயிலாகவே அடைதல் வேண்டும். இவ்வாறே துவஜாரோகணத்திலும் பசுவைக் குறிக்கும் கொடிச்சீலை, திருவருளைக் குறிக்கும் கயிறு வழியாகச் சென்று தம்பத்தில் ஆறாதாரங்களை ஆசனமாகக் கொண்டு அதன் மீதிருக்கும் பரமசிவத்தை அடைகின்றது. தம்பமும் சீலையும் பொருட்டன்மையால் இரண்டாயிருப்பினும் தம்பமே பொருளாகச் சீலை அதிலே ஒடுங்கித் தங்கியிருத்தல் அத்துவித நிலையைக் குறிக்கும். ஆதலினாலே துவஜாரோகணம் செய்தல் மும்மல பந்தத்தாற் பிறந்திறந்து சுழன்று வருந்தும் ஆன்மாக்கள் தீக்ஷை முறைப்படி மல நீக்கம் பெற்றுச் சிவபெருமானை அடைதலை உணர்த்தும் நற்குறியாம் என்பது செவ்விதிற்றுணியப்படும்.

ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும் படிக்கொடி கட்டினனே.

\- உமாபதிச்சிவாசாரியார் கொடிக்கவி



துவசத்தம்பம் பதி எழுத்தையும், கொடியேற்றுங் கயிறு பரை எழுத்தையும், கொடிச்சீலையில் எழுதப்பட்ட இடபதேவர் உயிரெழுத்தையும், கொடிச்சீலை திரோத எழுத்தையும், தருப்பைக் கயிறு மல எழுத்தையும் குறிக்கும்.

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து - நெஞ்சமுத்திப்
பேசுமெழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி.

\- கொடிக்கவி

மகோற்சவ விளக்கம்
சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள், அச்சுவேலி

பன்றித்தலைச்சி அம்மன் கோயில் கும்பாபிஷேக மலரிலிருந்து - *1991*

# பாஞ்சாலி சபதம்



மாதர் குலவிளக்கை, பாஞ்சால மன்னன் மகளுக்குத் தகுந்த கணவனைத் தேர்ந்தேடுப்பதற்காக வைத்த போட்டியில் பாண்டவர்கள் வெற்றி பெற்றுக் கை பிடித்த தவத்திருச் செல்வியை, மாயச் சூதில் இழந்துவிட்டதால், அவளைத் துரியோதனன் கொடுமைப் படுத்துவதைப் பார்த்து வாளா இருந்தனர். அங்குள்ள பெரியோர்களும், மன்னர்களும் பாஞ்சாலி கையெடுத்துக் கும்பிட்டு மன்றாடியும் உதவ முடியாமல் (அந்தக்கால நியாய நீதிக்குக் கட்டுப்பட்டு ) இருந்தனர். அந்த நிலையில் பாஞ்சாலி நிலத்தில் புரண்டு அழுது கதறுகிறாள். விழுந்தவனை மாடேறி உழக்குவது போலத் துச்சாதனனும் துட்டத்தனமாகக் கதைக்கிறான். அவள் அப்போது இருந்த பரிதாபமான நிலையைப் பாரதியார் பின்வருமாறு விளக்குகிறார்:

அநுஜா

“ஆடை குலைவுற்று நிற்கிறாள் - அவள்
ஆவென்று அழுது துடிக்கிறாள் - வெறும்
மாடு நிகர்த்த துச்சாதனன் - அவள்
மைக்குழல் பற்றி இழுக்கிறான்...”

பாஞ்சாலியின் சேலை அவள் நிலத்தில் புரண்டழக் குலைந்து போகிறது. ஐயகோ என்று கதறித் துடி துடிக்கிறாள். இரக்கமற்ற பாவி துச்சாதனன், பகுத்தறிவற்ற விலங்கு (மாடு) போல அவளுடைய அழகிய கரிய கூந்தலைப் (தலைமுடியைப்) பிடித்து இழுக்கிறான். இந்தக் கேவலத்தைப் பார்த்ததும் கரை புரண்டு கோபம் பொங்கத் பீமன் தருமரைப் பார்க்கிறான். அவரால் தானே மனதிற்கினிய தம் மனைவி பாஞ்சாலிக்கு இந்த நிலைமை ஏற்பட்டது என்று மனங்கொதிக்க துயரத்துடன் தருமரை நியாயம் கேட்கிறான்.. அதனைப் பாரதியார்:

“............. - இந்தப்
பீடையை நோக்கி வீமனும் - கர
மீறி எழுந்தது வெஞ்சினம் - துயர்
கூடித்தருமனை நோக்கியே - அவன்
கூறிய வார்த்தைகள் கேட்டீரோ”.

அண்ணே! சூதாடுபவர் வீடுகளில் அவர்களுக்குத் தொண்டு செய்யப் பெண்கள் உண்டு. ஆனால் அவர்கள் பெண்களை அடிமையாக்குவதில்லை. நீ என்ன நினைத்து எங்கள் மாதரசியைப் பணயமாக வைத்தாய்? அவள் யார்? உனது மனைவி மட்டுமா? எங்கள் மனைவியுமல்லவா? (அவளை நீ விரும்பியபடி வைத்தது சரியா என்று மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறான்)

“சூதர் மனைகளிலே - அண்ணே!
தொண்டு மகளிருண்டு,
சூதிற் பணயமென்றே - அங்கோர்
தொண்டச்சி போவதில்லை.
ஏது கருதி வைத்தாய்? - அண்ணே
யாரைப் பணயம் வைத்தாய்?

பெண்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக (எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக) இருக்கும் பெண்களின் குலவிளக்கை, அன்பே உருவாக விளங்கும் பேரழகியைப் பூமியிலுள்ள அரசர்களெல்லாம் போற்றும்படியாக வாழ்ந்து கொண்டிருப்பவளை, பாஞ்சால மன்னன் தவம் செய்து பெற்ற ஒப்பற்ற மகளை, குடும்பத்திற்கு ஒளி பொருந்திய விளக்காக மிளிரும் அரும் புதல்வியைச் சூதில் பணயம் வைத்துத் தோற்றுவிட்டாய். (அவள் தந்தை அறிந்தால் எவ்வளவு வேதனைப்படுவார் என்று சிறிதளவாவது யோசித்தாயா?) எவ்வளவு ........பெருந்தவறு செய்துவிட்டாய்? தருமத்தைக் காக்க வேண்டிய நீ அதனைக் கொன்றுவிட்டாய்.

"பூமி யரசரெல்லாங் - கண்டே
போற்ற விளங்குகிறான்,
சாமி புகழினுக்கே - வெம்போர்ச்
சண்டனப் பாஞ்சாலன்,

அவன்சுடர் மகளை - அண்ணே!
ஆடியிழந்து விட்டாய்,
தவறு செய்துவிட்டாய் - அண்ணே!
தருமங் கொன்றுவிட்டாய்."

அண்ணா ! நாம் வெற்றிகரமாக ஆண்டுவந்த நாடுகள் எல்லாவற்றையும் (அவர்கள் ஆட்சியில் பல அரசுகள் இருந்தன) தொலைத்துவிட்டதைப் பொறுத்துக் கொண்டோம். அது மட்டுமா எங்களையும் கூட பணயம் வைத்து அவர்களுக்கு அடிமையாக்கிவிட்டாய்! அதையும் பொறுத்துக் கொண்டோம். துருபதன் தவத்திருமகளை, பெரும் வீரனான திட்டத்துய்மனுடைய கூடப்பிறந்த ஒரேயொரு அன்புச் சகோதரியை பகடைக்காயாக (பணயமாக) வைத்துவிட்டாய். அவளைச் சூதில் இழந்ததால் துரியோதனனாதியோருக்கு அடிமையாக்கிவிட்டாய்! இதை எங்களால் பொறுக்க முடியாது என்று சொல்லித் தம்பி சகாதேவனைப் பார்த்து, "தம்பி! எரியும் நெருப்பைக் கொண்டு வா! எங்களுக்கு ஒளிவிளக்குப் போன்ற மனைவியைச் சூதில் வைத்து இழந்த அண்ணனின் கையை எரிப்போம்" என்று தாங்க முடியாத மனவேதனையாலும் கோபத்தாலும் (கோபத்தில் உச்சத்தில் எது சொல்கிறோம் செய்கிறோம் என்று மனம் தடுமாறிக் குழப்பமடையும்) கூறினான்.

"சக்கர வர்த்தியென்றே - மேலாந்
தன்மை படைத்திருந்தோம்
பொக்கென ஓர்கணத்தே - எல்லாம்
போகத் தொலைத்துவிட்டாய்.
நாட்டை யெல்லாந் தொலைத்தாய் - அண்ணே!
நாங்கள் பொறுத்திருந்தோம்.
மீட்டும் எமையடிமை - செய்தாய்,
மேலும் பொறுத்திருந்தோம்.
துருபதன் மகளைத் - திட்டத்
துய்ம னுடற்பிறப்பை,
இருபகடை யென்றாய், - ஐயோ!
இவர்க்கடிமை என்றாய்!
இது பொறுப்பதில்லை - தம்பி!
எரிதழல் கொண்டு வா.
கதிரை வைத்திழந்தான் - அண்ணன்
கையை எரித்திடுவோம்."

இவ்வாறு வீமன் சொன்னதைக் கேட்டு, வில் வீரனும் அண்ணனிடம் மதிப்பும் அன்பும் கொண்டவனுமான அருச்சுனன் வீமனின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாது, "வீமா! மனதால் யோசித்துச் சொன்னாயோ? இவ்வாறு கொஞ்சமும் சிந்திக்காது அளவுக்கு மீறி அதிகம் சொல்லிவிட்டாய். இந்த இடத்தில் (துரியோதனின் சபையில்) அண்ணனை அவமானப் படுத்துகிறமாதிரிக் கதைக்கலாமோ? அதுவும் எங்களை இந்த நிலைக்கு ஆளாக்கிய கெட்ட மனிதர்களுக்கு முன்னால் சொன்னாய்! மதிப்புக்குரிய துருபதனின் மகளைச் சூதாட்டத்தில் இழந்தது குற்றம் என்று சொல்கிறாய். கோபம் உனது பகுத்தறிவை அழித்துவிட்டதால் மூவுலகமும் போற்ற அரசாட்சியைத் திறம்பட நடாத்திய சக்கரவர்த்தியாகிய எங்கள் அண்ணனைக் கோபித்து இவ்வாறு பலவிதமான குற்றம் சுமத்திவிட்டாய்.

தர்மத்திற்குப் புறம்பான முறையில் சூதினால் எங்களை வென்று விட்டனர். ஆனால் முடிவில் தர்மம் தான் வெல்லும். (சூரியனை மழை முகில் மறைக்கும், ஆனால் அது நிரந்தரமன்று) என்ற இயற்கையின் மர்மத்தை உலகம் எங்கள் வாழ்க்கையால் அறிந்து கொள்ளும் என்பதற்கு விதி இப்படி வழி வகுத்துள்ளது. இன்று நாங்கள் அவர்களுக்கு அடிமையாகக் கட்டுபட்டுள்ளோம். கொஞ்சம் பொறுத்திருப்போம். நிச்சயமாகக் காலம் மாறும். அறவழியே நிலையானது. அதனால் தர்மம் வெல்லும். காண்டீபம் என்ற சக்திவாய்ந்த வில் (அம்பு) என்னிடம் உண்டு. அதனால் எமக்கு வெற்றி கிட்டும்" என்று அருச்சுனன் கூறினான்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேடி விதிஇந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலுங் காண்போம்; இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம்; காலம் மாறும்.
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்.
தநுஉண்டு காண்டீவம் அதன்பேர்" என்றான்

பலசாலியும் உடல் வலிமையில் யாரையும் வெல்லக்கூடிய திறமை மிக்க வீமன் தான் முன்பு தர்மரைக் குற்றம் சாட்டியதற்கு (அவர் மீது குற்றம் சுமத்தியமைக்காக) மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கும் வகையில் தன் தலை தாழ்த்தி வணங்கி நின்றான். அந்த வேளையில் துரியோதனனின் கடைசித் தம்பியான விகர்ணன் அறநெறிவழி நிற்பவன் எழுந்து நின்று அந்த அரச சபையில் இருந்தவர்களை நோக்கிப் பின்வருமாறு உரைக்கின்றான். "பெண்கள் குலத்திற்கெல்லாம் அரசி என்று சொல்லத்தக்க மாண்புமிக்க பாஞ்சாலிக்குப் பிதாமகர் பீஷ்மர் கூறிய இக்கால வழக்கத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். பிதாமகர் என எல்லோராலும் மதிக்கப்பட்டு வந்த எமது பாட்டனான பீஷ்மர் செய்தது தவறுதான்" என்பதை (நக்கீரர் சிவனை நோக்கி - நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டினாலும் நீர் செய்தது தவறுதான் என்று கூறியது போல) நெற்றிக்கு நேரே சுட்டிக்காட்டுகிறான். "தங்கள் மனைவியைக் கணவரெல்லாம் மிருகங்கள் எனக் கேவலமாக எப்படியும் நடாத்திடலாம் என்று பாட்டன் சொன்னான். வேதங்களில் பெண்களை நடத்தும் நீதி முறையினின்று விலகி, பின்பு இப்போது வழக்கத்திலுள்ள அறநெறியறியாத மக்கள் பின்பற்றும் நெறிமுறையே சரியானது என்று நிலைநாட்டுகிறான். அது ஏற்றுக்கொள்ள முடியாத குற்றமான ஒன்றாகும். எமது மூதாதையர் தங்கள் மனைவியரை விற்கும் வழக்கம் இருந்ததோ? இதுவரை அரசியரை அரசர்கள் சூதில் பணயமாக வைத்துத் தோற்ற கதை விந்தை எம் வரலாற்றில் உண்டோ? முன்பு விலை மாதருக்கு என்ற விதிமுறையைப் பிற்காலத்தவர்கள் (காலத்திற்கேற்ப

மக்கள் மாறுவது வழக்கம் அரசநீதி மாற்றம் அடைவதில்லை.) தம் வசதிக்கேற்ப விரும்பியபடி இக்கொள்கையை அநியாயமாகப் புகுத்திவிட்டனர். அது பேச்சளவில் சொல்கிறார்களே தவிர அதனை அறநெறி அறிந்தோர் பின்பற்றும் வழக்கம் இருந்ததில்லை. சூதாடுபவர் வீடுகளில் அங்கு வேலைசெய்யும் பணிப்பெண்களைக்கூடப் பணயமாக வைத்ததில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறோம்.

தன்னைத் தர்மர் இழந்த பின்னர் இவருக்கு மனைவி மக்கள் சகோதரர்கள் வீடு செல்வம் எதுவுமே சொந்தமில்லையே (அவர்களை முன்வைத்தபின் தன்னை வைத்திருந்தால் அது வலுவுள்ளதாக இருந்திருக்கலாம் என்ற கருத்துச் சுட்டிக்காட்டப்படுகிறது) என்று நீதிநெறியை எடுத்துக் காட்டுகிறார் அந்த மாதரசி. பெண்கள் உரிமையை நிலைநாட்டுகிறார். பொழுது போக்காக மகிழ்ச்சிக்காகச் சூதாடுவோம் என்றே சகுனி அழைத்தான். அப்படி இங்கு நடந்ததா? இங்கே மநுநீதிக்குப் புறம்பாகப் பெரும் பாவச் செயல் ஒன்று நடப்பதை எங்கள் கண் பார்க்கிறது. ஆனால் அரசநீதி உணர்ந்த நாட்டையாளும் மன்னர்களே ! எதற்காகப் பேசாதிருக்கிறீர்கள் ! அறநெறி உணர்ந்து தெளிந்த தாத்தாவே இது நீதியானதுதானோ? ஏன் பேசி மௌனமாக இருக்கிறீர்கள்?”

“பெண்ணரசி கேள்விக்குப் பாட்டன் சொன்ன
பேச்சதனை நான் கொள்ளேன். பெண்டிர் தம்மை
எண்ணமதில் விலங்கெனவே கணவரெண்ணி
ஏதெனிலும் செய்திடலாம் என்றான் பாட்டன்,
வண்ணமுயர் வேதநெறி மாறிப் பின்னாள்
வழங்குவதிந் நெறியென்றான்; வழுவே சொன்னான்”

இவ்வாறு விகர்ணன் சுட்டிக்காட்டி நீதி எது என்று கேட்டதும், அங்கே இருந்த சில அரசர்கள் எழுந்து நின்று தவறுதான் என்று உரத்துக் கூறினர். சிலர் எழுந்து நின்று சகுனியின் செயல் கொடுமையானது என்றனர். ஒரு நாளும் உலகம் இதனை மறக்காதென்றனர். என்ன கொடுமை யென்றாலும் செய்யுங்கள். ஆனால் இந்த மாண்புறு மாதரசியை இந்தச் சபையில் கேவலப் படுத்த வேண்டாம். மாலையில் சூரியன் மறையும் வானம் இந்தச் சிவப்பாக மாறுகிறது. (செவ்வானம்) அதே போர்க்களத்தே இரத்தம் பாய்ந்தோடும் வகையில் இந்தப் பாவத்திற்குப் பாண்டவரால் பழிக்குப்பழி வாங்கப்படும். அப்போதுதான் இந்தப் பாவத்திற்கு ஒரு விமோசனம் கிடைக்கும் என்று எதிர்காலத்தில் நடக்க இருப்பதை விகர்ணன் தெளிவாக உறுதிப்படுத்து கிறான்.

இவ்வாறு விகர்ணனும் உரைத்தல் கேட்டார்;
எழுந்திட்டார் சிலவேந்தர்; இரைச்சலிட்டார்
ஒவ்வாது சகுனிசெயும் கொடுமை என்பார்
ஒருநாளும் உலகிதனை மறக்கா தென்பார்
எவ்வாறு புகைந்தாலும் புகைந்து போவீர்;
ஏந்திழையை அவைக்களத்தே இகழ்தல் வேண்டா
செவ்வானம் படர்ந்தாற்போல் இரத்தம் பாயச்
செருக்களத்தே தீருமடா பழியிஃ. தென்பார்.

# RUBY'S CATERING

**020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு



திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா

கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்

அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா



**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton | THISTLE HOTELS more than just accommodating | Holiday Inn

*உட்பட பிரபல ஹோட்டல்களில் அங்கீகாரம் பெற்ற*
*தரம்மிகு இலங்கை மற்றும்*
*தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......*

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk


WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.
OPENING HOURS : MON - SAT (10.30 AM - 6.30 PM). SUNDAY (11.30 AM - 6.30 PM)